
# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

பெப்ரவரி 05 - 11, 2014 பக்கம் - 24 30/-



‘சுப்பர் சிங்கரும்’ பிரபாகரனும்



அண்ணன் என்னடா..! தம்பி என்னடா..!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PRIME LANDS (PVT) LTD.**

*Committed to Creat a Better Place on Earth*



PRIME சுவர்க்கபுரி மானிப்பாய்

## பெருமைக்குரிய சமூகத்தினருடன் உங்கள் வாழ்க்கையை சுபீட்சமாகவும் மகிழ்ச்சியாகவும் ஆரம்பியுங்கள்!

இலங்கையில் வீடு, காணி விற்பனை வரலாற்றில் தொடர்ந்து 19 வருடங்களாக "ரியல் லீடர்" என்ற உயர் நாமத்துடன் திகழ்ந்து கொண்டிருக்கும் பிரைம் லேண்ட்ஸ் குழுமம் யாழ் மக்களுக்கு உயர் சேவையை வழங்குவதற்காக யாழ் மண்ணில் தடம் பதிப்பதோடு,

யாழின் பேரின்ப நகரமான மானிப்பாயில் சகல வசதிகளுடன் உங்கள் வாழ்கையை வளமாக ஆரம்பித்திட பெறுமதியான 8 காணித் தொகுதிகளை உங்களுக்கு வழங்குகின்றது.



துணை நிறுவனங்கள்: PrimeGrameen, PRIME HOMES

**பரப்புகள் விசேட விலையில்**

**CALL- 0713 756 025, 0710 292 030**


இல. 75, டீ. எஸ் சேனாநாயக்க மாவத்தை, பொரள்ளை, கொழும்பு 08. 0112 699 822, www.primelands.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச்சோலை:

தேனாடான்

# படுகொலைகளை மறக்க முடியுமா?



கொக்கட்டிச்சோலை படுகொலைகள் நினைவாக அமைக்கப்பட்ட சிலை.

**கா**லம் எல்லாவற்றையும் மறக் கடிக்கச் செய்துவிடுவதில் சமார்த்தியசாலிதான். அதனால் தான் பலரும் தமிழினத்தின் இருண்ட சம்பவம் ஒன்றை இந்த வருடம் அநேகர் நினைவு கூர மறந்தே விட்டார்கள். அது தான் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் அல்லது இறால் பண்ணைப் படுகொலைகள். 1987 ஆம் ஆண்டு ஜனவரி 28, 29, 30 ஆகிய நாள்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலையில் நிகழ்ந் தேறிய இந்த வேட்டையை எப் படித்தான் அவ்வளவு சுலபமாக மறந்து போனோம்?

விசேட அதிரடிப்படையினர் கொக்கட்டிச்சோலை பிரதேசக் கிராமங்கள் மீது நடத்திய இந்தத் தாக்குதலில் இறால் பண்ணைத் தொழிலாளர்கள் உட்பட 133பேர் படுகொலை செய்யப்பட்டனர். 12 பேர் காணாமல் போயினர்

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே உள்ள 6 கிராமங்களை சுற்றி வளைத்த விசேட அதிரடிப்படையி னர் தரை மற்றும் வான்வழியாக நடத்திய தாக்குதலிலேயே பொது மக்கள் கொல்லப்பட்டனர். ஜன வரி 28ஆம் திகதி ஆரம்பமான இந் தத் தாக்குதல் மூன்று நாள்களாக நடை பெற்றது.

மண்முனைத்துறைக்கும் மகிழ டித்தீவிற்கும் இடைப்பட்ட வயல் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த இறால்பண்ணையிலேயேபடுகொலை களின் முதற்புள்ளி ஆரம்பிக்கப்பட் டது. அமெரிக்க- கொங்கொங் நாடுகளைச் சேர்ந்த கூட்டு நிறு வனம் ஒன்று நடத்தி வந்த இறால் பண்ணையில் வேலை செய்து வந்த உள்ளூரைச் சேர்ந்த 23 அப்பாவி மக்களைச் சுற்றிவளைத்து கைது செய்த படையினர் அவர்களை சந்தியில் வைத்து சுட்டுக்கொன்ற பின் உடல்களை பழைய ரயர்களை போட்டு அந்த இடங்களிலேயே எரித்தனர்.

அதன் பின்னர் முதலைக்குடா, மகிழடித்தீவு, முனைக்காடு, மகிழ டித்தீவு, தாண்டியடி, கொக்கட்டிச் சோலை ஆகிய கிராமங்களை சுற்றி வளைத்து கண்ணில் பட்டவர்கள் அனைவரையும் சுட்டுக்கொன்ற னர். படகுகளில் தப்பி சென்ற பொதுமக்களையும் உலங்குவானூர் யில் வந்த வான்படையினர் சுட்டுக் கொன்றனர்.

இந்தத் தாக்குதலில் 12 வயதுக்கு உட்பட 7 சிறுவர்கள் அடங்கலாக 150 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட போதிலும் 133 பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. பலர் காணாமல் போயிருந்தனர். மூன்று நாள் களாக அந்தக்கிராமங்களுக்கு யாரும் செல்ல முடியாத படி தடைகளைப் போட்டிருந்த விசேட படையினர் மிகக்கொடூர மான முறையில் இந்தப்படு கொலைகளை நடத்தியிருந்தனர்.

இது தொடர்பாக சுதந்திர மான நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு பிரஜைகள் குழு கோரிய போதி லும் அதனை அப்போதைய அரசு நிராகரித்திருந்தது.

இதன் பின்னர் 1991 ஜுன் 12ஆம் திகதி மீண்டும் இராணு வத்தினரால் இந்தக்கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதிலும் 166 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 400க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக் கப்பட்டன. அரிசி ஆலை ஒன் றில் பணிபுரிந்த 17 பொதுமக் களை அரிசி ஆலையுடன் சேர்த்து எரியூட்டப்பட்ட கொடூரமும் நடக்கவே செய்தது.

இதன் பின்னரும் கொக்கட் டிச்சோலையில் மனித வேட்டை கள் தொடரவே செய்தன. எனி னும் இந்தப் படுகொலைகளி லிருந்து தப்பிய கொக்கட்டிச் சோலை பிரதேச மக்கள் போர்க் காலத் துயரங்களைச் சுமந்த வண்ணம் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

# கரையொதுங்கும் மூங்கில் வீடுகள்

கரையொதுங்கிய மூங்கில் படகு வீடு - வடமராட்சி



**அ**ண்மைய நாள்களாக இலங்கையின் கரையோரங்களில் மூங்கிலாலான படகுவீடுகள் ஒதுங்கி வருகின்றன. ஆள்களற்ற இந்தப் படகு வீடுகள் வடமராட்சி, மட்டக்களப்பு, புத்தளம், காலி போன்ற பகுதிகளில் கரையொதுங்கிவருகின்றன.

முற்றுமுழுதாக மூங்கிலால் அமைக்கப்பட்ட அந்தப் படகு வீடுகளில் எவரும் இருக்கவில்லை. ஆனால் ஆள்கள் புழங்கிய தடயங்கள் இருந்தன. மட்டக்களப்பில் கரையொதுங்கிய படகு வீடுகள் எரியுண்ட நிலையில் தான் கரைசேர்ந்திருக்கின்றன. இதுபோன்ற மூங்கில் படகு வீடுகள் தாய்லாந்து, மியான்மர், இந்தோனேசியா, வியட்னாம் போன்ற நாடுகளில்தான் அதிகம் புழக்கத்தில் உள்ளன. எனவே இவற்றில் ஏதாவது ஒரு நாட்டில் இருந்துதான் இவை கடல் வழியே இலங்கைக் கரையோரங்களில் ஒதுங்கியிருக்கின்றன.

2004 ஆம் ஆண்டு சுனாமி தாக்கிய கரையோரங்களிலேயே இந்தப் படகு வீடுகளும் ஒதுங்கியிருப்பதால் இவை இந்தோனேசியா அல்லது மியான்மர் நாட்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. ஆனாலும் ஒரேயடியாக ஐந்துக்கும் மேற்பட்ட மூங்கில் படகு வீடுகள் திடீரென அநாதைகள் போல ஏன் இங்கு ஒதுங்கின என்று ஒரு கேள்வி எழுகிறது. அதிலும் சில வீடுகள் தீயூட்டப்பட்ட நிலையில் காணப்படுவதால் கடலில் ஏதேனும் அசம்பாவிதங் களால் இந்தப் படகு வீடுகளில் இருந்தவர்கள் உயிரிழந்து போக, அலையில் எத்துண்டு கடைசியில் அவை இலங்கைக் கரையை அடைந்திருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள்.

இன்னும் சிலரோ கடும் காற்றுக்க ாரணமாக கட்டிவைக்கப்பட்டிருந்த இந்தப் படகுகளின் நங்கூரமோ அல்லது கட்டுக்கயிறோ கைவிட்டதால் அவை காற்றின் திசைக்கேற்ப இங்கு வந்திருக்கலாம் என்று ஊகிக்கின்றனர். ஆனால் எவருக்குமே மூங்கில் படகுகளில் திடீர் தஞ்சம் அடைதல் பற்றிய உண்மையான காரணம் உறுதியாகத் தெரியவில்லை. ஆளாளுக்கு ஒவ்வொரு ஊகங்களை எடுத்து விட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

இன்னொரு புறத்தில் இந்தப் படகு வீடுகள் முன்பின் பார்த்தறியாத விநோதப் பொருள்கள் என்பதால் இப்போது அவற்றில் ஏறி பார்ப்பதற்கு கரையோரங்களில் திரள்திரளாக மக்கள் குவிவதையும் காணமுடிகிறது. இந்தப் படகு வீடுகளை கரையோரங்களில் காட்சிக்கு வைப்பதன் மூலம் இன்னும் நிறையப் பேரை ஈர்த்து வருமானங்களை ஈட்டும் வழிகளை உள்ளூராட்சி சபைகள் கண்டறியலாம். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம். சிந்திப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கப்பன் குதிருக்குள் இல்லை

அக்கினிபுத்திரன்

ஒரு வீட்டுக்காரர் இன்னொருவரிடம் கடன் வாங்கிவிட்டு அதை நீண்ட காலமாகத் திருப்பிக் கொடுக்கவில்லை. ஒரு நாள் கடன் கொடுத்தவர் வீடு தேடி வந்து கொண்டிருந்தார். அவரைத் தூரத்தில் கண்டு விட்ட வீட்டுக்காரர் தான் குதிருக்குள் மறைந்திருக்கும் விடயத்தை வருபவருக்குச் சொல்ல வேண்டாம் எனமகனிடம் கூறி விட்டு குதிருக்குள் ஒளிந்து கொண்டார். வந்தவர் "உன் அப்பா எங்கே?" என மகனிடம் கேட்டார். மகனோ "சத்தியமா எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என அடித்துச் சொல்லி விட்டான். பின்பு என்ன நடந்திருக்கும் என்பதை எல்லோராலும் புரிந்து கொள்ளமுடியும்.

சிறுவன் தகப்பன் சொன்னதையே செய்தான். ஆனால் அவனின் முட்டாள்தனமான வார்த்தைகள் அவனின் தகப்பனையே கடன் கொடுத்தவரிடம் காட்டிக் கொடுத்து விட்டன.

இப்போது எமது நாட்டிலும் அரச தரப்பினர் குறிப்பாக பாதுகாப்புத் தரப்பினர். எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்ற பாணியிலேயே அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். அந்த வரிசையில் இலங்கையின் இராணு வத்தளபதி லெப். ஜெனரல் தயா ரட்னாயக்கவும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் 20ஆம் திகதி முதல் அண்மைய நாள்கள் வரை மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் தோண்டப்பட்டு வரும் மனிதப்புதைகுழியில் 50க்கும் மேற்பட்ட மண்டையோடுகளும், எலும்பு போன்ற மனித எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. தொடர்ந்து தோண்டப்பட்டு வரும் இந்தப் புதைகுழியில் மேலும் பல எச்சங்கள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. குறித்த புதைகுழிப்பிரதேசம் 1990ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து வந்துள்ளது.

இந்தப் தை குழிகளில் மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்ட ஆரம்ப நாள்களிலேயே இராணுவத்தளபதி லெப். ஜெனரல் தயா ரட்னாயக்க புதைகுழிகளுக்கும் இராணுவத்துக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை எனத் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார்.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக, இந்த மண்டையோடுகள் எலும்புகள் எந்தக்காலப் பகுதியைச் சேர்ந்தவை? இவை ஆண்களுடையதா? பெண்களுடையதா? படைத்தரப்பினருடையதா? பொதுமக்களுடையதா? என்ற எந்த வித விபரமும் அறியப்படு முன்பே "இராணுவத்துக்கும் மனிதப் புதைகுழிக்கும் தொடர்பில்லையென அடித்துக் கூறி விட்டார் இராணுவத்தளபதி. இதில் வியப்படைய எதுவுமே இல்லை.

பாதுகாப்புச் செயலாளர் முதற்கொண்டு இராணுவப் பேச்சளார், பாதுகாப்பு ஊடக மத்திய நிலையப் பேச்சாளர் என அனைவருமே படைத்தரப்புத் தொடர்பான எந்தவொரு குற்றச்சாட்டு எழுந்தாலும் உடனடியாக அதை மறுத்துவிடத் தயங்குவதில்லை.

பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பேச்சாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தற்சமயம் அளவுக் கதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டதால் இப்போது உளநல சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவரும் படையினர் தொடர்பான குற்றச்சாட்டுக்களை மறுப்பதில் எவருக்கும் சளைத்தவரல்ல. அப்படிப்பட்டவர் இப்போது தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை மறுக்க முடியாமல் தவிக்கிறார் என்பதுதான் பரிதாபம்.



கொழும்பிலுள்ள சூதாட்ட விடுதி ஒன்றைச் சுற்றி வளைத்த பொலிஸாரைத் தன் அதிகாரத்தைப் பாவித்து உடனடியாகவே இடமாற்றம் செய்தார் இவர். ஆனால் இன்னொரு தொகுதி பொலிஸார் அந்த விடுதியைச் சுற்றி வளைத்துச் சம்பந்தப்பட்ட சிலரைக் கைது செய்து விட்டனர். இதனால் லக்ஷ்மன் ஹுலுகல்லவின் அதிகாரத் துஷ்பிரயோகம் அம்பலத்துக்கு வந்துவிடவே, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் கலைக்கப்பட்டது.

அதிகாரம் பறிபோனாலும் அவர் கைது செய்யப்படவில்லை. ஆனால் ஒரு சூதாட்ட விடுதிக்காக -அதாவது சட்ட விரோத ஒரு நிறுவனத்தின் நலன்களுக்காக - அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர் லக்ஷ்மன் ஹுலுகல்ல. இப்படியான ஒரு மனிதரின் குரல்தான் இதுவரையும் பாதுகாப்புப் பிரிவின் குரலாக ஒலித்தது.

இப்போது அதே பாணியில் கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளார் இராணுவத்தளபதி லெப். ஜெனரல் தயா ரட்னாயக்க. காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்க இவரால் அமைக்கப்பட்ட ஜெகத் டயஸ் தலைமையிலான இராணுவ அதிகாரிகள் குழு இலங்கையில் எவருமே காணாமற் போகவில்லை எனக் "கண்டு பிடித்த" சாதனையை நாம் இலகு வில் மறந்து விட முடியாது.

எப்படியிருந்த போதிலும் இராணுவத் தளபதியின் மறுப்பு செல்லுபடியாகப் போவதில்லை என்பது தான் யதார்த்தம். ஆனால் இராணுவ, பொலிஸ் தரப்பில் பேசவல்லவர்களைப் பொறுத்தவரை தாங்கள் சொல்வது உண்மையானதா? அல்லது நியாயபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவையா? என்பது தொடர்பாக அவர்கள் பொருட்படுத்துவதேயில்லை. அவர்களைப் பொறுத்தவரை தங்களின் வார்த்தைகள் மாற்ற முடியாத வேத வாக்குகள். அவ்வளவுதான்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கடுமையான ஒரு பிரேரணை முன் வைக்கப்படவுள்ள நிலையில் இந்த எலும்புகள் மண்ணைப் பிளந்து வெளியே வந்துள்ளன. 24 வருடங்களாக படையினரின் உயர் பாதுகாப்பு வலயமாக அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்திலேயே இந்தப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த எலும்புக் கூடுகளும் மண்டையோடுகளும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக வலிமையான சாட்சியங்களாக முன்னிறுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை.

அப்படியான ஒரு நிலைமையைத் தவிர்க்கும் ஒரு முதல் முயற்சியாகவே இராணுவத்தளபதி, அந்தப்புதைகுழிக்கும் இராணுவத்துக்கும் சம்பந்தமில்லை என மறுத்துள்ளார். ஆனால் அந்த மறுப்பே எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக பிசுபிசுத்துப் போய்விட்டது.

மேலும் இந்த எச்சங்கள் தொடர்பான ஆய்வுகள் சீன நிபுணர்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் ஒரு தகவல். வெளிவந்துள்ளது. ஏற்கனவே முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் எச்சங்களை அழிப்பதற்கு விசேட இரசயானங்களை வழங்கிய பெருமை சீனாவுக்கு உண்டு. அப் படிப்பட்ட சீன நிபுணர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் முடிவுகள் எப்படி அமையும் எனச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. எனவே மன்னார் மனிதப் புதைகுழிகள் தொடர்பாகச் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற குரல்கள் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளன.



மன்னார் புதைகுழியில் உள்ள எச்சங்கள் எந்தக் காலகட்டத்தைச் சேர்ந்தவை என்பது கண்டுபிடிக்கப்பட்டாலே இவை பற்றிய பல உண்மைகள் வெளிப்பட வாய்ப்புண்டு. எனவே மார்ச் மாதக் கூட்டத் தொடர் வரை இவை தொடர்பான ஆய்வறிக்கைகளை வெளிவர விடாமல் இழுத்தடிப் புக்கள் மேற்கொள்ளப்படும் என்பதையும் எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஷ்கன்

# வெம்மை உணர்தல்



"இலங்கையில் நடந்தது இனப்படு கொலை என்று கூற வேண்டாம். இனப் படுகொலை போன்றது என்று கூறுங்கள். இனப்படுகொலை என்று கூறினால் சட்டச் சிக்கல் ஏற்படும்" என்று வடக்கு மாகான சபை அமர்வில் சொல்லியிருக்கிறார் முன் னாள் நீதியரசரும் தற்போதைய வட மாகாண சபையின் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன். ஜெனீவாவில் இந்த முறை இலங்கைமீது கொண்டு வரப் படவுள்ள பிரேரணை மூலம் ஏதாவது சிறிய நம்பிக் கைக் கீற்றாவது தென் படலாம் என்ற நப்பாசையில் இருக்கும் தமிழ் மக்களின் மனதில் முதலமைச்சரின் இந்தக்கூற்று ஈயத்தை காய்ச்சி காதில் வார்த்திருக்கிறது.

இலங்கையில் நடந்த இனப்படு கொலைகள் தொடர்பில் சர்வதேச சுயா தீன விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுவதன் அவசியம் சர்வதேச தரப்புக்களால் வலியுறுத்தப்பட்டு வரு கின்றது. அண்மையில் கூட சர்வதேச மக்கள் தீர்ப்பாயம் இலங்கையில் நடை பெற்றது இனப்படுகொலையே என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப் பாயத்தில் பல நாடுகளையும் சேர்ந்த முன் னாள் நீதியரசர்களும் சட்டமா அதிபர் களும் உள்ளடங்கியிருந்தனர். அவர்களே இந்தத் தீர்ப்பை வழங்கினர். ஆனால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபை உறுப்பினர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக் கூடிய முதல மைச்சர் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் உண்மையில் திட்டமிட்ட இனப்படு கொலையே என்று சொல்வதற்கு ஏன் அச்சப்படுகிறார் என்பதுதான் யாருக் குமே புரியவில்லை.

இலங்கையில் 1983 தொடக்கம் 2009 பிற்பகுதி வரை தமிழ் மக்கள் மீது சிங்கள பேரினவாதத்தினால் ஏவப்பட்ட காட்டு மிரண்டித்தனமான பாய்ச்சல்களும் அவற் றால் நிகழ்ந்த கோரங்களும் அளவிட முடியாதவை. இனக்கலவரங்கள் என்ற போர்வையில் தென்னிலங்கையிலும் தமிழர் பிரதேசங்களான வடக்கு, கிழக் கிலும் அரங்கேற்றப்பட்ட படுகொலை களே இலங்கையின் இனமுரண்பாட்டை மேலும் விரிவாக்கின. தமிழ் இளைஞர்கள் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் கண்கள் தோண்டப்பட்ட, கை கால்கள் அறுக்கப் பட்ட கொடூரங்கள் எல்லாம் இலங்கை யில் நடந்த இனப்படுகொலைக்கான சிறந்த ஆதாரங்கள். தமிழ்ப் பெண்கள் சிங்களக் கும்பல்களால் கூட்டு வன்புணர் வுக்கு உட்படுத்தப்பட்டு கடித்துக் குதறப் பட்டு கொன்று வீசப்பட்ட சம்பவங் களுக்கும் குறைவில்லை.

இறுதிப்போர்க்காலத்திலும் போர் தவிர்ப்பு வலயங்களுக்குள் நடந்த கொடூ ரமான கொலைகள் அனைத்தும் ஒளிவு மறைவு இன்றி வீடியோக் காட்சிகளாக வெளியாகியிருக்கின்றன. கைகள் பின்னால் கட்டப்பட்டு கண்கள் கறுப்புத் துணியால் மூடப்பட்டு இழுத்து வரப்படும் ஆண்கள் சதுப்பு நிலமான தரைப்பகுதிக்குள் முட் டுக்காலில் இருத்தப்பட்டு பின்னந்தலை யில் துப்பாக்கி வேட்டுக்களால் கொல் லப்பட்ட காட்சிகளை சனல் -4 உள்ளிட்ட ஊடகங்கள் வெளியிட்டு இலங்கையில் நடந்தது இனப்படுகொலை தான் என் பதற்கான சாட்சியங்களையும் இலங்கை அரசப்படைகளின் வக்கிர முகத்தையும் துலாம்பரமாக போட்டுடைத்து விட்டன. இவை தவிர மோதல் தவிர்ப்பு வலயங்கள் என அறிவித்து விட்டு அங்கு வாருங்கள் என அழைத்து அப்பாவி மக்கள் மீது சர்வ தேசத்தினால் தடை செய்யப்பட்ட நச்சுக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள், கிளஸ் டர் குண்டுகள், இரசாயனக் குண்டுகள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# அண்ணன் என்னடா!
# தம்பி என்னடா!





"அழகிரி என்றாலே சிலருக்கு புன்னகை. சிலருக்கு ஆத்திரம், வெறுப்பு. இதை நான் மறுக்க வில்லை. இந்தக் குணங்களைக் கொண்ட அழகிரியை, நான் ஒரு கரும்பாகத்தான் கருதுகிறேன். கரும்பை ஒரு பக்கத்திலே சுவைத் தால் இனிக்கும். இன்னும் சுவைக் கலாம் என்று ஒவ்வொரு கணுவாக வெட்டிக் கொண்டே போனால், நுனிக் கரும்பு இனிக்காது. துவர்க் கும். அழகிரியை ஒரு கரும்பாகக் கருதி, கழகத் தொண்டர்கள் எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்குத் தான் பயன்படுத்திக் கொள்ளவேண் டும். அழகிரிதானே... கருணாநிதி யின் மகன்தானே? என்று நினைத்து நுனிக் கரும்பைக் கடித்தால், உப்புக் கரிக்கும், சுவைக்காது. நுனிக் கரும் பிலே இருக்கின்ற தழை நாக்கைக் கிழிக்கும்." - 2010 ஆம் ஆண்டு நடந்த பேரன் துரை தயாநிதி (அழகிரியின் மகன்) திருமணத்தில் கருணாநிதி சொன்ன தீர்க்க தரிசன வார்த்தைகள் இவை. நுனிக் கரும்பு, இப்போது குத்திக் கிழிக்க ஆரம் பித்திருக்கிறது!

"பொதுக்குழுவில் வாய்ப்பு கிடைத்தால் தி.மு.க. தலைவர் பதவிக்கு ஸ்ராலின் பெயரை முன் மொழிவேன்" என கடந்தவருடம் கருணாநிதி சொன்னபோது, அழகிரி கொந்தளித்தார். "அப்படி ஒரு சூழ்நிலை வந்தால், நான் போட்டி யிடுவேன்" என்றார். ஆயினும் பின்னர் அந்த விவகாரம் அமுங்கி விட்டது.

குடும்ப அரசியல் தலைவிரித் தாடும் தி.மு.கவில் அடுத்த தலை வர் யார் என்பது ஏறக்குறைய எல்லோருக்குமே தெரிந்த ஒன்று தான். இப்போதைய தலைவர் கரு ணாநிதியின் இரண்டாவது மனை விக்குப் பிறந்தவரான ஸ்ராலினே அவர். இதற்கான காய் நகர்த் தல்களை கருணாநிதி மிக நீண்ட காலமாகவே மேற்கொண்டு வருகிறார். ஆனால் தமிழகத்தின் தென் மாநிலங்களில் கருணாநிதி யின் இன்னொரு மகனான மு.க. அழகிரிக்கே செல்வாக்கு இருக் கிறது. இதனால் மெல்ல மெல்ல அழகிரியின் மனதிலும் தலை மைத்துவ ஆசை துளிர்விட்டது. இந்த ஆசைக்கு ஸ்ராலின் எதிர்ப் பாளர்களும் தூபமிட, தி.மு.க. வில் சகோதரச் சண்டை என்ற தீ.

(18 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 05 – 11. 2014
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-: 021 567 7609

# வெளிச்சத்துக்கு வருமா உண்மைகள்?

மீண்டுமொரு முறை ஊடகக் குரல்வளை நசுக்கப்பட்டிருக்கிறது. சிரேஷ்ட வர்த்தக பெண் ஊடகவியலாளர் மெல் குணசேகர, இனந் தெரியா தோரால் கோரமாக பத்தரமுல்லையில் உள்ள அவரது வீட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

கொலை நிகழ்ந்த சமயம் வீட்டில் மெல் குணசேகரவைத் தவிர யாருமே இருக்கவில்லை. எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டுக்காக தேவாலயம் சென்றுவிட்டனர். இந்த நிலையில் தான் இனந்தெரியாதோரின் வேட்டைக்கு அவர் இலக்காகி இருக்கிறார். அவரது சடலத்தில் கூரிய ஆயுதம் ஒன்றால் குத்தப்பட்ட அடையாளங்கள் தெளிவாகவே தென்பட்டன. எனவே இது ஒரு திட்டமிட்ட கொலை என்பதில் எவருக்கும் ஐயம் கிடையாது. ஆனால் இதை யார் செய்தார்கள் என்பதுதான் இப்போதைய கேள்வி.

இலங்கையில் போர் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த வேளையில் ஏ.எப்.பி. செய்திச் சேவைக்காக ஊடகப் பணியாற்றியவர் மெல் குணசேகர. அவர் வர்த்தக ஊடகவியலாளராக இருந்த போதும் பல சர்ச்சைக்குரிய விடயங்களை வெளிக்கொண்டுவந்தவர். இதேநேரம் இலங்கையில் இடம்பெற்ற ஆள்கடத்தல், மனித உரிமை மீறல், சட்டவிரோதக் கொலைகள் என்பன தொடர்பாகவும் அவர் பல உண்மைகளை அம்பலப்படுத்தியிருந்தார்.

46 வயதான மெல் குணசேகர திடீரெனக் கொலையுண்டமைக்கான காரணம் தனிப்பட்ட விரோதமாக இருக்கலாம் என்ற கோணத்திலேயே அரச தரப்புத் தகவல்கள் வெளிவருகின்றன. இவ்வாறு அவ சரத்தனத்தோடு அவருடைய கொலை பற்றிய விசாரணைகளை ஒரு முற்கற்பிதத்தோடு அரசு அணுகுவது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. ஏனெனில் இலங்கை மிக மோசமாக ஊடக சுதந் திரம் மீறப்படும் நாடுகளில் முன்னணி இடத்தை வகிக்கின்றது. எனவே இங்கு ஊடகர்கள் கொலை செய்யப்படாமல் இருந்தால் தான் அது ஆச்சரிய மான விடயம்.

ஏற்கனவே சிவராம், லசந்த, நிமலராஜன் என ஏராளமான ஊடகவியலாளர்கள் அதிகாரத்தால் காவுகொள்ளப்பட்டிருந்தார்கள். பிரகீத் எக்னலிகொட உள்ளிட்ட இன்னும் சில ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு காணாமலேயே போய்விட்டார்கள்.

உதயன் போன்ற தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிடும் ஊடக நிறுவனங்களைக் குறிவைத்து தாக்குதல்கள் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டன. ஊடகவியலாளர்களின் கொலை பற்றியோ அல்லது அவர்கள் காணாமல் போனமை பற்றியோ அல்லது ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் பற்றியோ பொறுப்புள்ள அரசென்ற வகையில் இலங்கை அரசு அர்ப்பணிப்போடு நடந்து கொள்ளவில்லை. மாறாக ஊடகவியலாளர்களுக்கு நிகழ்ந்த அசம்பாவிதங்கள் பற்றிய விசாரணைகளை எவ்வளவுதூரம் இழுத்தடிக்க முடியுமோ அவ்வளவுதூரம் இழுத்தடிப்பதில்தான் அதன் கவ்னம் இருந்தது. இதனால் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் அரசே இருந்துள்ளதோ என்ற சந்தேகமே எப்போதும் தோன்றுகின்றது. மெல் குணசேகரவின் விடயத்திலாவது அரசு பொறுப்போடு நடந்து உண்மைகளை வெளிச் சத்துக்குக் கொண்டுவருமா?

# ‘சுப்பர் சிங்கரும்’ பிரபாகரனும்

பிரமன்



நான் முழுத் தமிழன்

சனிக்கிழமை. நள்ளிரவு கடந்து ஞாயிறு விடிந்து கொண்டிருந்த பொழுதில் அலறியது தொலைபேசி. தூக்கக் கலக்கத் தோடு காதில் வைத்தேன். மறுமுனையில் நண்பன் ஒருவன்.

“மச்சான்! சுப்பர் சிங்கர் பைனலில திவாகர் வெண்டிட்டானடா. ஒரு தமிழன் வெண்டதை நினைக்க பெருமையாக் கிடக்கு”

அவன் சொன்ன செய்தியின் அடியும் நுனியும் எனக்குப் புரியவேயில்லை. அடுத்த நாள் காலை வீட்டுக்காரருக்கு நண்பனின் நள்ளிரவு தொலைபேசி குறித்து சொல்லிவிட்டு “யார் அந்தத் திவாகர்?” என்று தெரியாத்தனமாகக் கேட்டு விட்டேன். அவ்வளவுதான். எல்லோரும் விழுந்துவிழுந்து சிரிக்கத் தொடங்கினார்கள்.

“இஞ்சபார். திவாகரைத் தெரியாதாம் இவருக்கு. பிறகென்னத்துக்கு தமிழன் எண்டு இருக்கிறார்?” என்று கேலியோடு சொல்லிக் கொண்டார்கள். எனக்கு அவமானமாகப்

> “ஈழத்தில் தமிழினப்படுகொலைகள் நடந்தபோதும், அதை தொடர்ந்து நடந்துவரும் எம்மக்களின் அவல வாழ்வினையும் தமிழகத்தின் பிரதான தொலைக் காட்சிகள் இருட்டடிப்புச் செய்தே வருகின்றன. மாறாக நடிகைகளின் திருமணம், முதலிரவு, கர்ப்பமடைதல், குழந்தைப்பேறு பற்றிய செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன.
>
> - சர்வானந்தா (கனடா)



## பேசமுடியாப் பொருள்

கனடாவுக்கு, ஒரு நிகழ்வுக்கு விஜய் ரீவியில் ஒளிபரப்பாகும் ‘ நீயா நானா’ புகழ் கோபிநாத் வந்திருந்தார். அவரின் தமிழ் ஆங்கில உரைகளும் அறிவு சார் உரைகளும் சிறப்பானவை. மதிக்கின்றோம். ஆனால் அவற்றில் அடிப்படையான தமிழ் உணர்வு கூட வெளிப்பட்டதில்லை என்பது ஏமாற்றமே.

உரை நடுவில் அவர் சபையோரிடம் சொன்னார் ‘நீங்கள் விரும்பிய தலைப்பைத் தாருங்கள். அந்தத் தலைப்பில் நான் 5 நிமிடங்கள் பேசிக் காட்டுகின்றேன்’ என்றார். பேசினார், அவர் விரும்பிய தலைப்பை மக்கள் கொடுத்த போது. ஒரு மேசையில் அமர்ந்திருந்த நண்பர்களும் நானும் உரத்துச் சொன்னோம் “தமிழீழம்” என்ற தலைப்பை. அவர் ஒரு பார்வை பார்த்து புறம் ஒதுக்கினார். மீண்டும் மீண்டும் உரத்து ஒலித்தோம்!

“புரிகிறது… தமிழர்கள் மனதில் இருக்கும் கனவு தமிழீழம்” என்றார், தவிர்க்க முடியாமல். பாவம் அதற்கு மேல் அவரை வருத்தக் கூடாது என விட்டு விட்டோம். மணிக்கணக்காக பேசும் தமிழர் ஒருவரால் ஐந்து வரிகள் பேச முடியாது போன ஒரு தலைப்பு “தமிழீழம்”

- ஒரு புலம்பெயரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போய்விட்டது. தமிழனாகப்பிறந்தால் கட்டாயம் அந்தத் திவாகரை தெரிந்தே வைத்திருக்க வேண்டும் போலும். நான் கிணற்றுத் தவளையாக இருப்பதால் அது தெரியவில்லை.

உடனேயே எனக்கும் திவாகரைத் தெரியும் என்று நாலு பேருக்கு "எழுப்பம்" காட்டி நானும் தமிழன் என்பதை நிரூபிக்க 'பேஸ்புக்கை' விரித்தேன். (யதார்த்த உலகின் கோழைகள் எல்லோருமே மாவீரர்களாக உருவெடுப்பது பேஸ்புக்கில்தானே) ஏற்கனவே நாலைந்து நண்பர்கள் பதிவிட்டிருந்த திவாகர் படத்தை நானும் கொப்பியடித்து என் பதிவில் இட்டேன். திவாகரைப் பற்றிய குறிப்புகளை தேடிப்பிடித்து வாசித்தேன். நான் போட்டிருந்த திவாகரின் படத்துக்கு 'லைக்'குகள் குவியத்தொடங்கின. போதாக்குறைக்கு " தமிழினத்தின் கனவு பலித்துவிட்டது." என்ற அர்த்தப்பட ஏராளமான பின்னூட்டங்களும் வந்தபடி இருந்தன. நெஞ்சை நிமிர்த்தியபடி வெளியே வந்தேன். ஏனெனில் இப்போது நான் 'முழுத்தமிழன்'!

***

சினிமாவை விடவும் சின்னத் திரைகளின் ஆதிக்கம் தமிழகத்தைப் போலவே ஈழத்து வீடுகளுக்குள்ளும் குடிவந்துவிட்டது. எப்போதும் தொலைக்காட்சிக்கு முன்னாலேயே தவம் கிடக்கும் கூட்டமாக நம்மையும் அறியாமல் மாறிக்கொண்டுவருகிறோம். அதிலும் பார்ப்போரின் கவனத்தை அதிகம் கவரும் நிகழ்ச்சிகளில் முதன்மையானது 'சுப்பர் சிங்கர்'. விஜய் ரீவியில் ஒளிபரப்பாகிய இந்த நிகழ்ச்சிக்கு இலங்கையிலும் ஏராளமானோர் அடிமைகளாகி இருந்தார்கள். தமிழனாகப் பிறப்பெடுத்ததே 'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காகத்தான் என்பதைப் போன்றே அவர்களின் செயற்பாடுகள் இருந்தன. அதிலும் இறுதிப்போட்டியில் திவாகர் என்ற போட்டியாளர் வாகை சூடிவிட, 'சுப்பர் சிங்கர்' அபிமானிகள் செய்த அலட்டல்கள் தாங்கமுடியாதவை.

திவாகரின் வெற்றியால் தமிழினத்தின் தீராக்கனவொன்று நனவாகிவிட்டதாக சமூக வலைத்தளங்களிலும், தொலைபேசிகளிலும், நேரிலும் கூறிக் குதூகலித்தார்கள். இத்தனைக்கும் இந்த நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்கிய ஒரு தொலைபேசி நிறுவனமும், நிகழ்ச்சியை ஒளிபரப்பிய விஜய் ரீவியும் எந்த வகையிலும் தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத தன்மையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

சிவகார்த்திகேயன் என்ற நடிகர் பங்குகொண்ட நிகழ்ச்சியில் அவரை பெண் ரசிகைகள் கன்னத்தில் கிள்ளியதையும், கட்டிப்பிடித்துக் கொஞ்சியதையும் ஒளிபரப்பிய விஜய் ரீவி புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரைத் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்துவருகிறது. அந்தத் தொலைக்காட்சியில் பிரபலமான நிகழ்வான 'நீயா நானா'வில் கலந்துகொண்ட அரசியல் பிரமுகர் ஒருவர் தனக்குப் பிடித்த பேச்சுவன்மை கொண்ட மூன்று தலைவர்களில் ஒருவராக பிரபாகரனின் பெயரை உச்சரித்திருந்தார். ஆனால் அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பான போது மிகத்தந்திரமான முறையில் பிரபாகரனின் பெயர் வெட்டப்பட்டுவிட்டது. அந்தளவுக்கு தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத வகையிலேயே விஜய் ரீவி செயற்பட்டு வருகிறது.

'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்கிய தொலைபேசி நிறுவனம் கூட தமிழர் நலன் விரோதச் செயற்பாடுகளில் குறைந்ததல்ல. அந்த நிறுவனம் தன்னுடைய '3G' தொழில்நுட்பத்தை பரிசோதிக்கும் களமாகத் தேர்ந்தெடுத்தது முள்ளிவாய்க்காலைத்தான். இந்த நிறுவனத்தின் '3G' தொழில்நுட்பத்தின் மூலமே இறுதிப்போரின்போது புலிகளின் இலக்குகள், அவர்களின் நகர்வுகள், எறிகணை செலுத்தி மையங்கள் என்பன துல்லியமாக கண்டறியப்பட்டு இலங்கை இராணுவத்தின் வெற்றி இலகுவாக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தமிழர் நலனுக்கு விரோதமான நிறுவனமும் தொலைக்காட்சியும் கைகோர்த்து நடத்திய 'சுப்பர் சிங்கர்' நிகழ்ச்சியைப் பார்க்காதவன் தமிழனாக இருக்க முடியாது என்ற தோரணையிலேயே பலர் இன்னமும் இருக்கிறார்கள். தமிழனாவதற்கான தகுதியாக இவர்கள் கருதுவது இதுபோன்ற தமிழர் விரோத சக்திகளின் ஏற்பாட்டில் எங்களுடைய சிந்தனைகளை களிப்பூட்டல்களின் திசையை நோக்கி நகர்த்திச் செல்லும் நிகழ்ச்சிகளைத்தான்.

ஆனாலும் இத்தகைய நிகழ்ச்சிகள் கூட முற்கூட்டியே வெற்றியாளர்கள் யார் என்பது முடிவு செய்யப்பட்ட பின்னர் பார்வையாளர்களை ஒருவித பரபரப்பு மாயைக்குள் வைத்திருப்பதற்காக நேர்மை, மக்களின் வாக்கு என்று ஏராளமான செப்படி வித்தைகளுடன் அரங்கேறுகின்றன. இந்த முறை 'சுப்பர் சிங்கரில்' மகுடம் சூடிய திவாகர் என்ற இளைஞனைத்தான் குறித்த தொலைக்காட்சி மையப்படுத்தி தன்னுடைய விளம்பரப்படுத்தல்களை மேற்கொண்டு வந்தது. இதனால் ஒரு சில வாரங்களுக்கு முன்னரேயே திவாகர்தான் வெற்றியீட்டப்போகிறார் என்பது பலருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிந்துபோனது(இதுகுறித்து ஏற்கனவே 'சுப்பர் சிங்கரில் சூதாட்டம்' என்ற தலைப்பில் 'சுடர் ஒளி'யில் தெரிவித்திருந்தோம்). இவ்வாறு ஒரு நாடகத்தனமான போட்டியைத்தான் எங்கள் கண்முன்னாலேயே வெற்றியாளரைத் தெரிவு செய்யப்போகிறார்கள் என்று பதைபதைப்புடன் தொலைக்காட்சிக்கு முன்னால் அநேகர் குந்தியிருந்து பார்த்தோம்.

தமிழினத்தின் விடுதலையை விரும்பாத – அதுவும் தமிழர்களின் விடிவுக்காகப் போராடிய புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரைத் திட்டமிட்டு மறைக்கும் – தொலைக்காட்சி ஒன்றில் எங்களின் பொதுபுத்தியை அவமானப்படுத்தும் நிகழ்ச்சியைப் பார்க்காவிட்டால் ஆயுளில் அரைவாசி போய்விட்டதாகவும், தமிழனாக வாழ்வதற்கான தகுதி பறிபோய்விடும் என்றும் அங்கலாய்ப்பவர்களை என்னவென்று சொல்வது?

# ஆடுகிறது நீதியின் தராசு

ஹரீஷ்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் உயிர்கள் இன்னும் ஊசலாடியபடியே இருக்கின்றன.

1991 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்டார். இதன் பின்னர் நடத்திய தேடுதல்களின் போது கொலையின் சூத்திரதாரிகள் என அப்பாவிகளே கைதுசெய்யப்பட்டார்கள். பலவந்தத்தின் பேரில் அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு தூக்குத்தண்டனையும் விதிக்கப்பட்டுவிட்டது.

தூக்குத்தண்டனைக் கைதிகள் தங்களுடைய தண்டனையைக் குறைக்குமாறு இந்திய ஜனாதிபதிக்கு கருணை மனுப்போட்டார்கள். ஆனால் கொல்லப்பட்டவர் இந்தியாவின் பிரதமராக இருந்தவர் என்பதால் அந்தக் கருணை மனுக்களை எவரும் கண்டுகொள்ளவில்லை. எனினும் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரான நளினியின் தூக்குத்தண்




டனை, ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியின் பரிந்துரையால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆயினும் ஏனைய மூவரும் தூக்குக் கயிற்றை எதிர்பார்த்தபடியே இருந்தார்கள். இந்த நிலையில் இவர்களின் கருணை மனுக்கள் 11 வருடங்களின் பின்னர் நிராகரிக்கப்பட்டன.

28 ஜனவரி 1998ஆம் ஆண்டு இவர்களுக்கான தூக்குத்தண்டனையை சென்னை நீதிமன்றம் வழங்கியது. பின் அந்தத் தண்டனையை 11 ஆம் திகதி மே மாதம் 1998 ஆண்டு திகதி இந்திய உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது. ஆனால் 2000 ஆம் ஆண்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட நால்வரும் ஜனாதிபதியிடம் கருணைமனுக்களை அனுப்பினர். நீண்டகாலம் அநாதையாகக் கிடந்த அந்தக் கருணை மனுக்கள் கடைசியில் நிராகரிக்கப்படும் என்று கைதிகள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

குண்டு வெடிப்புகளோடு தொடர்புடைய நடிகர் சஞ்சய் தத் போன்றோரையெல்லாம் மனிதாபிமானத்தோடு அணுகிய இந்திய அரசு ராஜீவ் காந்தி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கருணை மனுக்களை மாத்திரம் கசக்கி எறிந்தது.

உண்மையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அதிபயங்கரக் குற்றவாளிகள் அல்லர். இவர்களில் அதிகூடிய குற்றம் செய்தவர் பேரறிவாளன். அவர் செய்த குற்றம் குண்டுவெடிப்புக்குப் பயன்படுத்திய பற்றரியை குறித்த தாக்குதலின் மூளையாகச் செயற்பட்ட ஒற்றைக் கண் சிவராசனுக்கு வாங்கிக் கொடுத்ததுதான். சாதாரணமாக ஒரு நட்பு அடிப்படையிலேயே - எதற்கென்றே தெரியாமல்தான் - அவர் இந்தப் பற்றரிகளை வாங்கிக்கொடுத்துள்ளார். ஆனால் அவ்வாறு பற்றரி கொடுத்ததை அவரது வாக்கு மூலத்தில் திரிபுபடுத்தி, ராஜீவ் காந்தியைக் கொல்வதற்காக திட்டமிட்டே இந்த பற்றரிகளை வாங்கிகொடுத்தார் என்று பதிவு செய்யப்பட்டுவிட்டது. இதனை அந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்த புலனாய்வு அதிகாரியே இப்போது மனந்திருந்தி ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் தன்னுடைய இந்தத் தவறு ஒரு உயிரைப் பறிக்கும் அளவுக்கு பாரதூரமாக மாறிவிடும் என்று தான் எண்ணியிருக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அண்மையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கும் மூவருக்கும் ஒரு வெளிச்சக் கீற்று தென்பட்டது. சந்தன மரக்கடத்தல்காரனாக இருந்த வீரப்பனின் சகாக்கள் என்ற குற்றச்சாட்டில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தண்டனையை இந்திய உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைத்த செய்தியே அது. அதுவும் குறித்த கைதிகளின் கருணை மனுக்கள் எட்டுவருடங்களுக்குப் பின்னர் நிராகரிக்கப்பட்டதை காரணம் காட்டியே அவர்களின் தண்டனை குறைப்புச்செய்யப்பட்டது. இதனால் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனையும் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த 29 ஆம் திகதி இவர்களது வழக்கு விசாரணைக்கு வந்தபோது " காலம் தாழ்த்தப்பட்ட கருணை மனு நிராகரிக்கப்பட்டதை காரணம் காட்டி தண்டனையைக் குறைக்குமாறு கேட்பது நியாயம் இல்லை" என்ற சாரப்பட நீதிபதிகள் தெரிவித்த கருத்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கருத்தின் மூலம் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கும் மூவருக்கும் தண்டனைக் குறைப்பு கிடைக்காதோ என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

வீரப்பனின் சகாக்களுக்கு கிடைத்த அதே நீதி ஏன் இவர்களுக்கு மறுக்கப்படுகிறது என்பது புரியாத புதிரே. ஒருவேளை அதிகாரத்தின் ஆட்டத்துக்கு நீதியின் தராசு ஆடுகிறது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## கைமாறு செய்வதெப்போது?

சூரியநிலா,
உசன்.



உயிரணுக்களுக்குள்ளே
உன்னை விதைத்து
பயிராக்கி வைத்தாய்
பாரினில் என்னை!

உன்னை உடைத்து
உயிரோவியமாக
என்னை வரைய
என்றுமே கறைந்தாய்!

என் உடல் மொழி புரிந்து
உளமது பொங்க
பரிமாறிய உன் கைகளுக்கு
கைமாறு செய்வது எப்போது?

உருமறைந்து போனாலும்
கருவாய் இருந்து
என் வாழ்விற்கு
காரணமானவள் நீ!

தொப்புள் கொடியாக
நீ தந்த உறவு
இன்று
தொடர்பறுந்து போக
காரணந்தானேதோ?

## தேன் கூடும் தேனீக்களும்

ஆ.முல்லைத்திவ்யன்,
மருதங்கேணியூர்.

தன்னிறைவு
பெறும் நோக்கில்
அந்தத் தேனீக்கள்
தம்முடைய பாட்டில்
தேனை உற்பத்தி செய்தபடி
....

காலம் தொட்டு
தேன்கூட்டுக்கு யாரோ...
கல்லெறிந்தபடி....
கல்லெறிபடும் போது
தேனீக்கள் கலைவதும்
பின் கல்லெறிந்த
விழிகளுக்கு மண்தூவி
மீண்டும் ஒரு இடத்தில்
கூடு கட்டுவதும் அவற்றின்
வழமை...

கல்லெறிபடும் போது
பறப்பதும் பின்பு
ஒன்றுபடுவதும்
அவற்றின் இயல்புதான்...
இந்தமுறையும்
தேன் கூட்டை....



## தாங்க மறுப்பது தப்பு

கே. பிரதிக்ஷா,
கரவெட்டி

அன்பே உனக்குத் தெரியாதா?
என் உள்ளம் நினைப்பது புரியாதா?
குருதியில் குளித்தவன் அறியாயோ?
நான் தலைவிதி அழித்தவன்
தெரியாதோ?

என் உடலில் போரின் காயவடுக்கள்
அழியாச் சொத்துக்கள்
யாரறிவார்?
சுடுகாடு வரைக்கும் உடலோடு
வந்து கருகும் சொத்து அது
மட்டுந்தானம்மா

ஊனம் என்னும் சொல் உடலினிலே
உருவம் பெற்ற தமிழனம்மா
தாங்கும் தாரம் நீயம்மா
தாங்க மறுப்பது தப்பம்மா

மனதினிலே சுமந்தேன்
கற்பனைகள் அத்தனையும்
கரைந்து போனதம்மா
ஓர் தட்டின் உறவுகள்
உரசி விட்ட தீயோ அம்மா?

மனதை வாட்டும் வேதனைகள்
மாளவைக்கும் சோதனைகள்
வாழ்க்கை என்பதும் இது
தானோவருந்தித் துடிக்குது
என்னிதயமம்மா.

## அழகு தமிழ்

கல்லொளுவை பாரிஸ்,
மள்வானை.

சிங்கத்தின் கம்பீரம்
புலியின் நடை
மானின் துள்ளல்
முயலின் ஓட்டம்
குயிலின் பாட்டு
கிளியின் பேச்சு
காலைக்கதிரவன்
மாலையின் செவ்வானம்
இரவின் குளிர்ச்சி
இவற்றை விட
என் அன்னைத் தமிழே
எனக்கு அழகு!

## ஆன்மாவின் சாட்சி

சா.ரமேஸ்குமார்,
மருதனார்மடம்.



ஆகாயம் அகங்காரம்
கொள்வதில்லை
எவருக்கும் அடிபணிய
முயற்சிப்பதுமில்லை

இருந்தும்
ஒரு கடவுள் போல்
தலைநிமிர்ந்து நிற்கிறது

கரும் முகில்களைத்
தன் கருவறையில் சுமந்து
மழையாக முத்தமிடுகிறது
அவ்வளவு பாசம்

பிரபஞ்சம் போர்த்தியுள்ள
பசுமையில்இடியோசை
வேட்டோசை வரை
தன் பரந்த வெளிகளில்
அனுமதித்திருக்கிறது

அதன் செவிப்பறை
இது வரை கிழிந்ததில்லை
பல அவதாரங்களின்
தத்துவத்தை
அது காற்றலையில்
பதிப்பித்துள்ளது

சாத்தானின் உறவை
பலமுறை
மறுதலித்து இருக்கிறது
ஒரு நினைவில்லா
ஞானி போல்
எங்குமே பகைமை
பாராட்டாது
அது மனித ஆன்மாவின்
சாட்சி போல்
வியாபித்து விளங்குகின்றது.

## மனித கலாசாரத்தின்

முல்லை ரமணன்



மனித கலாசாரத்தின்
உச்ச விளிம்புகளில்
இன்று- எம் மண்ணில்
மலிந்து போன
மனித புதைகுழிகளில்
எம் உறவுகளின்
மண்டையோடுகளும்
எறும்புகளும்
திசைக்கொன்றாய்
காட்சிப் பொருட்களாய்
நாளைய சந்ததிகளின்
மனம்பதிவுக்களுக்காய்
புதிய நாகரீக
தடம் பல பதித்து
காத்துக் கிடக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வசு



## மோசமான தோல்வி

நியூசிலாந்து மண்ணில் 33 ஆண்டுக்குப் பின் இந்திய கிரிக்கெட் அணி மோசமான தோல்வியைப் பதிவு செய்துள்ளது. ஒருநாள் தொடரை 4:0 என்ற கணக்கில் தட்டிச் சென்றது நியூசிலாந்து அணி. நியூசிலாந்து சென்ற இந்திய அணி, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. இதில் முதலிரண்டு போட்டிகளிலும் தோல்வியுற்ற இந்திய அணி 3ஆவது போட்டியைப் போராடிச் சமப்படுத்தியது. தொடரைத் தீர்மானிக்கும் 4ஆவது போட்டியில் தோல்வியடைந்த இந்திய அணி, ஆறுதல் வெற்றியை நோக்கி களமிறங்கிய 5ஆவது போட்டியிலும் மோசமாகத் தோல்வியடைந்தது. இந்திய பந்துவீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் என அனைவரும் சொதப்ப நியூசிலாந்து மண்ணில் வரலாற்று தோல்வியைப் பதிவு செய்தது.

197576, 198081இல் நியூசிலாந்து சென்ற இந்திய அணி, ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை. 33 ஆண்டுக்குப் பின், மீண்டும் மோசமான தோல்வியடைந்துள்ளது. இதே வேளை, 5ஆவது போட்டியில் ஒரு ஓட்டத்தைப் பெற்ற போது டோனி, ஒருநாள் அரங்கில் 8000 ஓட்டங்களை கடந்தார். இதன் மூலம் குறைந்த இன்னிங்ஸில் (214) இந்த மைல்கல்லை எட்டிய நான்காவது வீரர் என்ற பெருமை பெற்றார் டோனி. இந்தியாவின் கங்குலி (200), சச்சின் (210), மேற்கிந்திய தீவுகளின் லாரா (211) ஆகியோர் முதல் மூன்று இடங்களில் உள்ளனர். இவர்கள் மூவருமே துடுப்பாட்டத்தில் முதல் மூன்று இடத்தில் களமிறங்கியவர்கள். ஆனால் பின்வரிசையில் களமிறங்கும் (57 இடம்) டோனி, அதிவேகமாக 8000 ஓட்டங்களை எட்டியுள்ளார்.

தொடர் முழுவதும் நியூசிலாந்து வீரர்கள் சிறப்பாக விளையாடினர். "எங்களைப் பொறுத்தவரை சூழ்நிலைக்கு ஏற்ப விரைவில் மாற்றிக் கொண்டு, திறமை வெளிப்படுத்தாதது தான் தோல்விக்கு முக்கிய காரணம்" என டோனி கருத்து தெரிவித்திருக்கின்றார். தொடரின் ஐந்து போட்டியிலும் நியூசிலாந்தின் வில்லியம்சன் அரைச்சதம் எடுத்து அசத்தினார். ரோஸ்டெய்லர் தொடர்ச்சியாக இரண்டு சதம் அடித்தார்.

உள்ளூர் தொடர்களில் அசத்தும் இந்திய இளம் வீரர்கள் தொடர்ச்சியாக வெளிநாட்டு மண்ணில் சொதப்புகின்றார்கள். தென்னாபிரிக்க தொடரைத் தொடர்ந்து நியூசிலாந்து மண்ணிலும் அவர்களின் ஆட்டம் மந்த கதியில் இருக்கின்றது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான தவான் - ரோகித் ஜோடி நின்று நிலைத்து அதிரடியாக ஆடவில்லை. இந்த நிலையில் அனுபவ வீரர்களான கம்பீர் - சேவாக் ஜோடியின் தேவை உணரப்பட்டிருக்கும். அடுத்து வரும் தொடர்களில் இவர்களை அணியில் மீள இணைப்பதற்கு பி.சி.சி.ஐ. நடவடிக்கை எடுக்கும் என நம்பலாம்.

இந்திய அணிக்கு என்றும் தலைவலியாக இருப்பது அவர்களின் பந்துவீச்சுத்தான். அண்மைய 20 ஒருநாள் போட்டிகளில் 250 அல்லது அதற்கு மேலான ஓட்டங்களை வாரி வழங்கியுள்ளனர். இதில் 11 போட்டிகளில் எதிரணியினர் 300 அல்லது அதற்கும் மேல் ஓட்டங்களை எடுத்துள்ளனர். இதனால், இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு கூடுதல் நெருக்கடி ஏற்படுகிறது. நியூசிலாந்து தொடரில் முதல் மூன்று போட்டியிலும், 5ஆவது போட்டியிலும் 300க்கும் மேற்பட்ட ஓட்டங்கள் எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அணியின் முன்னணி பந்துவீச்சாளர்களின் நிலை பரிதாபமாக உள்ளது. ஐந்து போட்டிகளில் புவனேஷ்வர் குமார், 3 விக்கெட்டுகள் தான் வீழ்த்தினார். முகமது ஷமி மட்டும் இந்திய ரசிகர்களுக்கு ஆறுதலாக உள்ளார். ஆனாலும் ஓட்டங்களை வாரி வழங்கியிருந்தார். சுழற்பந்து வீச்சாளர்களான அஷ்வின், ஜடேஜாவும் ஏமாற்றம் அளித்தனர். இவர்கள் இருவரும் சகலதுறை வீரர்கள் என்பதால் அணியில் தொடர்ச்சியாக இடம்பிடித்து வருகின்றார்கள். இதனால், இவர்களுக்கு பதில் மாற்று வீரர்களை பரீட்சித்துப் பார்ப்பது இந்திய அணிக்கு அவசியமானது ஒன்று.




## முதல் பட்டம்

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்காவும் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் லீ நாவும் முதன் முறையாக சம்பியன் பட்டம் வென்றனர். இதன் மூலம் சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் இருவரும் மூன்றாவது இடத்துக்கு முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் முதல் நிலை வீரர் ஸ்பெயினின் நடால், தரவரிசையில் 8ஆவது இடத்திலுள்ள சுவிட்சர்லாந்தின் வாவ்ரின்காவை எதிர் கொண்டார். இதில், வாவ்ரின்கா 6:3, 6:2, 3:6, 6:3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். இது இவரின் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் முன்னணி வீராங்கனையான சீனாவின் லீ நா, 24ஆவது இடத்தில் உள்ள சுலோவாகியாவின் டொமினிகா சிபுல்கோவாவை எதிர் கொண்டார். இதில், லீ நா 7:6, 6:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். இதன் மூலம், ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் முதல் முறையாக லீ நா கிண்ணம் வென்றுள்ளார். தவிர, ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்ற முதல் ஆசிய வீராங்கனை என்ற புதிய வரலாறும் அவர் படைத்துள்ளார். இது, இவரது 2ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும். முன்னதாக 2011இல் பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸில் லீ நா பட்டம் வென்றிருந்தார்.

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் இந்தமுறை போட்டிகள் இடம் பெற்ற மெல்போர்ன் மைதானங்களில் கடும் வெப்பம் வாட்டியதால் முன்னணி வீரர்கள் பலர் உபாதைகளுக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா போகாதேங்கோ

● ஆதங்கன்

"அம்மா எங்கள விட்டுடுட்டுப் போகாதேங்கோ!" பிஞ்சுகளின் கதறல் விமான நிலையம் எங்கும் எதிரொலித்தது. ஆனாலும் என்ன செய்வது அம்மா போகத்தான் வேண்டும். அவள் இனி ஒரு நிமிடங்கூட அங்கிருக்க அரசு அனுமதிக்கப் போவதில்லை. விமானத்துக்குச் செல்லும் பாதையில் செல்வதும் பின்னர் திரும்பிவந்து பிள்ளைகளைக் கட்டிப் பிடித்து அழுவதுமாக அந்தத் தாய் அல்லாடிக்கொண்டிருந்தாள்.



கண்ணீரோடு ராஜினியும் குழந்தைகளும்

அவள் பெயர் ராஜினி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். வழக்கம் போல வெளிநாட்டு மாப்பிள்ளையை அவளுக்கு பெற்றோர் பேசி மணம் முடித்து வைத்தனர். அவளைக் கரம்பிடித்தவர் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து சென்று கனடாப் பிரஜா உரிமை பெற்ற ராஜ் மனோகர். திருமணம் முடிந்து சில மாதங்கள் தம்பதிகள் இருவரும் இந்தியாவில் வாழ்ந்தார்கள். அங்கேதான் அவர்களுடைய மூத்த மகளும் பிறந்தாள். பின்னர் கனடாவுக்கு ராஜ்மனோகர் சென்றுவிட்டார். அங்கிருந்தபடியே தங்களுடைய திருமண உறவைக் காரணம் காட்டி ராஜினியையும் 2008 ஆம் ஆண்டு கனடாவுக்கு அழைத்துக் கொண்டார். ஆனால் அங்கு சென்ற பின் செய்ய வேண்டிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் இருவரும் அக்கறை காட்டவில்லை. ஏனெனில் கனடாவில் கால் பதித்துவிட்டாலே "சிற்றிசன்" நிச்சயம் என்று யாழ்ப்பாணத்து குழந்தைக்குக் கூடச் சொல்லும்.

ஆனால் உண்மை அதுவல்ல. அந்த நாட்டின் சட்ட திட்டங் களுக்கு ஏற்ப உரிய பதிவுகள் முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை ராஜினி செய்யத் தவறியிருந்தார். இந்த நிலையில் அவருக்கு இரண்டாவதுபெண்குழந்தையும் பிறந்தது. இந்தியாவில் பிறந்த நீதுஷாவுக்கும் கனடாவில் பிறந்த அமிர்தாவுக்கும் கனடிய பிரஜா உரிமை வழமையான நடைமுறைகளின் படி வந்து சேர்ந்துவிட்டதால் ராஜினியின் பதிவு பற்றி எவரும் கணக்கில் எடுக்கவில்லை. ஆனால் கனடா அரசு கவனக்குறைவாக இருக்கவில்லை. திடீரென ஒருநாள் ராஜினிக்கு வந்து சேர்ந்தது அந்தச் செய்தி.

"உங்களுடைய பிரஜா உரிமைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் ஜனவரி 26 ஆம் திகதிக்குப் பின்னர் நீங்கள் கனடாவில் வசிக்க முடியாது."

இந்தத் தகவலைக் கேட்டதும் ராஜினிக்கு உலகமே சுற்றியது. அவர்கள் முன்னரேயே அக்கறை எடுத்துச் செயற்பட்டிருந்தால் பொது அமைப்புக்கள் மூலமோ அல்லது ஊடகங்கள் மூலமோ இந்த விடயத்தை கனடியப் பிரதமர் மட்டத்துக்கு எடுத்துச் சென்று நல்ல தீர்வொன்றைக் கண்டிருக்கலாம். ஆனால் எங்களை நாடுகடத்த மாட்டார்கள் என்ற அதீத நம்பிக்கையும், பதிவு பற்றிய அக்கறையீனமும் காரணமாக எல்லாம் கைமீறிப் போனது. இதன் பின்னரே தான் அவர்கள் விழித்துக்கொண்டார்கள்.

"கனடியப் பிரஜா உரிமை கொண்ட இரண்டு பிள்ளைகளையும் பராமரிக்கவாவது கனடாவில் வசிக்க விடுங்கள்" என்ற ராஜினியின் கடைசி ஆயுதம் கூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

" வேண்டுமானால் உங்கள் பிள்ளைகளையும் கூடவே அழைத்துச் செல்லாம். அதற்கு நாங்கள் தடை சொல்ல மாட்டோம். ஆனால் நீங்கள் இங்கு இருக்க முடியாது" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டது கனடிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் .

இப்போது ராஜினி தன்உயிரையே வைத்திருந்த பச்சிளம் குழந்தைகளை விட்டுவிட்டு இலங்கைக்குத் திரும்பிவிட்டார். ஆனால் குழந்தைகளை நினைத்து அவரும், தாயை நினைத்துப் பிள்ளைகளும் ஏங்கிக் கொண்டே இருக்கிறார்கள். அக்கறையீனம் ஒரு குடும்பத்தின் ஒட்டு மொத்த மகிழ்வையே தின்று முடித்துவிட்டது.

# இராசி பலன்

05.02.2014 - 11.02.2014

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு மூன்று, ஆறாம் இட அதிபதி புதனுடன், பூர்வ புண்ணிய ஸ்தான அதிபதியாகிய சூரியன் அனுகூல அமர்வில் உள்ளார். சுக்கிரன், செவ்வாய் கூடுதல் நற்பலன் தருகின்றனர். உங்களின் நல்ல ஆலோசனையை, குடும்ப உறுப்பினர்கள் மதித்து நடந்து கொள்வர். மனதில், பல நாள் இருந்த கவலைகளுக்கு விடிவு கிடைத்திடும். சமூகத்தில் அதிக நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து உற்பத்தி, விற்பனை செழிக்கும். பெண்கள் குடும்ப நலன் சிறக்க, தேவையான பணி மேற்கொள்வர். மாணவர்கள், இலகுவான மனதுடன் படித்து, நல்ல தேர்ச்சி விகிதம் பெறுவர்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிநாதன் சுக்கிரன், குரு வீட்டில் அமர்ந்து சனி, ராகு மற்றும் குருவின் அனுகூல பார்வையை பெறுகிறார். இதனால், உங்கள் வாழ்வில், புதிய சாதனை நிகழ்த்துகிற எண்ணம் வளரும். பணிகளில் [illegible]ற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். புத்திரரின் எண்ணங்களை முன்னேற்ற வழியில் கொண்டு வர [illegible] உடல் நல ஆரோக்கியம் பலமுடன் இருக்கும். ல்லறத்துணை விரும்பிய பொருள் [illegible] பெண்கள், கணவருக்கு உறுதுணையாக நடந்து கொள்வர். மாணவர்கள், வெளியிடம் [illegible] வைத்துக் கொள்வதால், படிப்பில் நினைவுத்திறன் வளரும்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிநாதனும், சுக ஸ்தான அதிபதியுமாகிய புதன் அஷ்டமஸ்தான அமர்வில் அனுகூலமாக உள்ளார். மற்ற கிரகங்களில் கேது மட்டுமே நற்பலன் தருகிறார். உங்களுக்கு, உரிய மரியாதை தருபவர்களிடம் மட்டும், கருத்துக்களை பேசுவது, சிரமம் தவிர்க்க உதவும். இல்லறத் துணை மனதில், உங்கள் மீதான நல்ல எண்ணம் வளரும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய, லாப விகிதம் குறைத்திடுவீர்கள்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உங்கள் ராசிக்கு, பூர்வ புண்ணியம் மற்றும் தொழில் ஸ்தான அதிபதியாகிய செவ்வாய், தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். எவரிடமும் அன்பு, சாந்தம் மிகுந்த குணத்துடன் பழகுவதால் மட்டுமே, அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். எதிர்பாராமல் வருகிற சிரமங்களை, இஷ்ட தெய்வ அருள்பலம், கவசம் போல இருந்து விலக வைக்கும். இளைய சகோதரர் அதிக அன்பு பாராட்டுவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். சத்து நிறைந்த உணவு, உடல் நலம் பலம் பெற உதவும். மாணவர்கள் அதிக விலை மதிப்புள்ள பொருட்களை கவனமுடன் பயன்படுத்தவும்.

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு, நவகிரகங்களில் செவ்வாய், கேது தவிர மற்ற கிரகங்களின் அமர்வு, அளப்பரிய வகையில் நற்பலன் தரும் விதமாக உள்ளது. தொழில் நுட்பம் மற்றும் பொது அறிவு சார்ந்த விஷயங்களை அறிவதில், மிகுந்த ஆர்வம் கொள்வீர்கள். சத்தியம், நேர்மை குணம், மன உறுதியுடன் பின்பற்றுவீர்கள். மகளின் ஜாதக யோக பலம், வாழ்வில் புதிய நன்மைகளை பெற்றுத் தரும். விவகாரங்களில் சமரச தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர், உங்களின் அருமை, பெருமை உணர்ந்து பெருமிதம் கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, உபரி பணவரவு கிடைக்கும்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு, தன பாக்ய ஸ்தான அதிபதியாகிய சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம், சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். நண்பரிடம் பேசும் வார்த்தை, விரக்தி மனதினால் கடினமாக அமைந்து, அவப்பெயரை உருவாக்கலாம், கவனம் தேவை. திட்டமிட்ட செயல் நிறைவேறுவதில், தாமதம் ஏற்படலாம். [illegible] நம்பகமானவர்களை பணியமர்த்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான [illegible] என்கிற நடைமுறையை பின்பற்றுவீர்கள். பணியாளர் உழைப்புக்கு, தகுந்த [illegible] மாணவர்கள், புதிய முயற்சியால் படிப்பில் தேர்ச்சி விகிதம் பாதுகாத்திடுவர்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு பாக்யம், சுப விரய ஸ்தான அதிபதியாகிய புதன் நான்காம் இடத்தில் அனுகூலமாக உள்ளார். குரு, சுக்கிரன் கூடுதல் நற்பலன் வழங்குகின்றனர். கருணை மிகுந்த செயலால் உறவினர், நண்பர்களின் பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தின் அத்தியாவசியத் தேவையை, தாராள பணச்செலவில் மேற்கொள்வீர்கள். புதிய வாகனம் வாங்குகிற முயற்சி கை கூடும். புத்திரர், உங்களின் சொல்லுக்கு மரியாதை தருவர். தொழில், வியாபாரம் செழிக்க சில சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்வீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு. மாணவர்கள் உற்சாக மனதுடன் படிப்பில் ஈடுபடுவர்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உங்கள் ராசிக்கு, ஜீவன ஸ்தான அதிபதியாகிய சூரியன் அனுகூல அமர்வில் உள்ளார். சுக்கிரன், கேது, செவ்வாய் அதிக நற்பலன் தருகின்றனர். இடம், சூழ்நிலை உணர்ந்து பேசி, நற்பெயரை பாதுகாத்திடுவீர்கள். இளைய சகோதரரின் பாசமும், உதவியும் மனம் நெகிழ வைக்கும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரரின் கவனக்குறைவான செயலை சரி செய்வீர்கள். எதிரியால் தொந்தரவு அணுகாத [illegible] வாழ்வு இருக்கும். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு, உபரி பண வரவு கிடைக்கும். [illegible] உறவினர் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்த, உறுதுணையாக செயல்படுவர். மாணவர்கள் [illegible] சுற்றுவதை குறைப்பதால் படிப்பில் கவனம் வளரும்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உங்கள் ராசிக்கு தனம், புகழ் ஸ்தான அதிபதியாகிய, சனி பகவான் நட்பு கிரகம் ராகுவுடன், ஆதாய பலன் தரும் இடத்தில் உள்ளார். குரு, சுக்கிரன் சிறப்புமிகு பலன்களை வழங்குகின்றனர். உங்கள் எண்ணத்தில் புதுமையும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத் தேவைக்கான பணச்செலவு அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களின் உதவி உண்டு. வாகன பயணம் இனிதாக அமையும். தொழிலில் சராசரி உற்பத்தி, விற்பனை, பணவரவு இருக்கும். பணியாளர்கள், உபரிபண வரவில் சுயதேவை பூர்த்தி செய்வர்.

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணியம், தொழில் ஸ்தான அதிபதியாகிய சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம், சந்திரன் மட்டுமே நற்பலன் வழங்குகின்றனர். மற்ற கிரகங்கள் எதிர்மறையாக செயல்படுகின்றனர். மனதில் சோர்வு, செயல் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். குடும்ப சூழ்நிலையின் முக்கியத்துவம் [illegible] பணி மேற்கொள்வது அவசியம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம், அதிக [illegible] பாதுகாக்க வேண்டும். பணியாளர் சலுகைப் பயன் பெறுவதில், தாமதம் இருக்கும். குடும்ப [illegible] சிக்கனம் மேற்கொள்வர். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களில் [illegible]

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு தனம், லாபம் ஸ்தான அதிபதியாகிய குருபகவான் அனுகூல அமர்வில் உள்ளார். சுக்கிரன், கேது கூடுதல் நற்பலன் வழங்குகின்றனர். உங்கள் சொல்லும், செயலும் சிறப்பாக அமைந்து, புகழும், உபரி பணவரவும் பெற்றுத் தரும். இஷ்ட தெய்வ வழிபாடு மற்றும் பிரார்த்தனை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய நுட்பங்களை பயன்படுத்தி, வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். பணியாளர்கள், பாதுகாப்பு நடைமுறையில் உரிய கவனம் கொள்வது அவசியம். பெண்கள், கணவர் வழி சார்ந்த உறவினர்களிடம் நன்மதிப்பு பெறுவர். மாணவர்கள் உரிய கவனம் வேண்டும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உங்கள் ராசிக்கு சுக சப்தம ஸ்தான அதிபதி புதன், சூரியனுடன் புத ஆதித்ய யோக பலத்துடன், ஆதாய அமர்வில் உள்ளார். மற்ற கிரகங்களில், சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தருகிறார். முக்கியமான பணியை தொடர் முயற்சியினால் நிறைவேற்றுவீர்கள். தெய்வ நிந்தனை கருத்துக்களை பேசுபவரிடம் விலகுவதால், மனஅமைதியை பாதுகாக்கலாம். எதிரியினால் உருவாகிற சிரமம், [illegible] மாற்றம் பெறும். இல்லறத்துணையின் செயல்பாடுகளில் குறை கூறவேண்டாம். [illegible] மூலதனம், சராசரி உழைப்பு என்ற நடைமுறை பின்பற்றுவீர்கள். மாணவர்கள் [illegible] படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலிங்கம் பத்மநாபன்

# அது ஒரு அழகிய நிலாக்காலம்



## 3 கிராமங்களின் கதை

ஒளிப்படம் : பவி

### நிலம் 02

இந்தக் கிராமங்களில் பெருமளவான எருமை மாடுகள் கொழுத்து நிறைந்திருக்கும். அதனால் உழவுக்குப் பெரும்பாலும் எருமை மாடுகளே பயன்பட்டன. அவை ஒன்றன்பின் ஒன்றாக சால் கட்டி உழும் அழகே அழகு. அனுபவம் வாய்ந்த முதிர்ந்த எருமையை அனுபவசாலியான உழவர் முன்னே செலுத்த ஏனையவை அவரின் பின்னே அணி வகுத்துச் சென்றன. மக்கள் எருமைப் பசுக்களை உழவுக்குப் பயன்படுத்தாத பண்பு கொண்டவர்களாக இருந்தனர். நாம்பன்கள் மட்டுமே உழவுக்குப் பயன்படுத்தப்பட்டன.

**பலகை அடித்தல்**

தெரிவு செய்யப்பட்ட விதை நெல்லை நல்லநேரம் பார்த்து நீரில் ஊறப்போட்டு அவை முளை வந்த பின் பலகை அடித்து மட்டம் தட்டப்பட்ட கூழான மண்ணின் மேல் முளை நெல் விதைக்கப்பட்டது. கிராமத்தவர் யாவரும் ஒன்று சேர்ந்து வயல்களின் மேட்டுத் தன்மை, பள்ளம் இனங்கண்டு கூட்டு முறையிலேயே பலகை அடித்து விதைத்தார்கள்.

பலகையடித்தல் மிகவும் கோலாகலமாக நடைபெறும். யாரின் காணியில் பலகை அடிபடுகின்றதோ, அவர் வீட்டில் கிராமத்தின் ஏனையவர்களுக்கும் சாப்பாடு. காலை தோசை, சம்பல், மதியம் ஒரு பெரிய கிடாரத்தில் சோறு, ஒரு பெரிய சட்டியில் மீன் அல்லது இறைச்சிவத்தலும் கத்தரிக்காயும் போட்ட கறி, ஒரு சொதி. சிறுவர்கள் பாடு ஒரே கொண்டாட்டம் தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் செய்வார்கள். பலகை அடிக்கும் போது பலகையை அழுத்த சுமை தேவைப்படும். அநேக சந்தர்ப்பங்களில் சிறுவர்களையே சுமையாகப் பயன்படுத்துவர். மண் நீர்மட்டத்துக்கு மேல் தெரியும் இடங்களில் பலகையில் ஏறி நின்று அந்தமண் திடலை அமத்தி விட வேண்டும்.

**காவலுக்கு கெட்டிக்காரர்கள்**

பலகை அடித்து முதல் மூன்று நாள்கள் சிறகை என்றொரு வகைச் சிறிய தாராக்களிலிருந்து நெல்லைக் காப்பாற்ற வேண்டும். ஒரு வயலில் சிறகைக் கூட்டம் இறங்கினால் அந்த வயலின் முளை நெற்கள் யாவற்றையும் ஒன்று கூட மிச்சம் விடாமல் உண்டு சென்று விடும்.

பயிர் முளைத்து அறுவடை வரை பறவைகள் மிருகங்களிலிருந்து அவற்றைக் காப்பாற்றுதல் மிகப்பெரிய கடமையாகும்.

நெல் முற்றும் காலத்தில் பகலில் மயில், கௌதாரி போன்றவை கூட்டமாக வந்து அழிவை ஏற்படுத்தும். பால் பிடிக்கும் காலத்தில் பச்சைக்கிளிகள் கூட்டமாக வந்து நெல்லின் பாலைக் குடித்துச் சென்று விடும்.

இரவில் யானை, பன்றி, மான், மரை, குழுவன் மாடுகளினால் பெரும் அழிவு ஏற்படும். இதற்காக ஒவ்வொரு விவசாயியும் காட்டுக் கரைகளில் காவற்கொட்டில், காவற்பரண் அமைத்து இரவில் அதில் தங்கி மணிகளை அடித்து விலங்குகளை விரட்டுவார்கள். சீன வெடிகளைக் கொளுத்தி எறிவார்கள். விவசாயிகளின் நன்மைக்காக அரசாங்கம் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒவ்வொரு துப்பாக்கிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கி அவர்களுக்கு துப்பாக்கி வைத்திருக்கும் உரிமையை வழ்ங்கியது. சில சந்தர்ப்பங்களில் காவற் கடமையிலிருக்கும் போதே பன்றி வேட்டை வாய்த்து விடும். மான், மரை, யானை போன்றவற்றைச் சுடுதல் சட்டப்படி குற்றம்.

**(இன்னும் நிலம் விரியும்)**

# ஓடவைக்கும் நமீதா



தனது கட்டழகான உடம்பை மூலதனமாகக் கொண்டு சினிமாவில் ஒரு வலம் வந்தவர் நமீதா. பின்னர் சரியான வாய்ப்புகள் இல்லாததால் இளைஞன் என்ற படத்தில் வில்லியாக அவதாரமெடுத்தார். ஆனால் அந்த முயற்சியும் நமீதாவுக்கு பலன் கொடுக்கவில்லை. இருப்பினும் கோடம்பாக்கத்திலேயே முகாமிட்டு சின்னத்திரையில் முகம் காட்டியபடி, கடை திறப்பு விழாக்களில் கலந்து கொண்டுபொழுதை கழித்து வருகிறார்.

இதற்கிடையே தனது பெயரளவில் ஏதாவது பரபரப்பு இருந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதற்காக, தற்போதைக்கு அரசியல் என்ற அஸ்திரத்தை கையிலெடுத்திருக்கும் நமீதா, தேசிய அளவிலான ஒரு பிரதான கட்சியில் தான் இணையப் போவதாகவும் ஒரு செய்தியை காற்றுவாக்கில் கசிய விட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்தமாதிரி ஏதாவது பரபரப்பு செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருந்தாலும் அவருக்குப் புதிதாக படங்கள் கிடைத்தபாடில்லை.

அதனால் இப்போது கடின உடற்பயிற்சி மூலம் உடல் எடையை 25 கிலோ வரை குறைத்திருப்பதாக் புதிய செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார் நமீதா. அதை நம்பி அவரை பார்க்கச்சென்றவர்களுக்கு பெரிய அதிர்ச்சியாம். காரணம், முன்பு இருந்ததற்கு கடுகளவும் குறையாத அதே தோற்றத்துடன் காட்சி கொடுக்கிறாராம் நமீதா. அதைப்பார்த்து வீடுதேடி சென்றவீர்கள் விழுந்தடித்து ஓடி வந்து விட்டார்களாம்.

# ஹாய்! செல்லப்பா!!

எழுதுவது.....



இன்றைய கால கட்டத் தில் பொது சன ஊடகங்கள், நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் அபமிரித வளரச்சி காரணமாக பல சவால்களை எதிர் கொள்கின்றன. இவை கலை, கலா சாரத்தில் கடுந்தாக்கத்தைச் செலுத்துகின்றன.

கூட்டாகக் கலைகளை இரசித்த, கலைகளைப் படைத்த காலம் போய், தனியன்களாய், தொலை பேசிகளிலும், கணணிகளிலும், தொலைக் காட்சிகளிலும் கரைந்து போகின்றனர்; தொலைந்து போகின்றனர். தனக்கும், தனது வீட்டுக்கும், நாட்டுக்கும் பெரும் சுமையாக அமைகின்றனர்.

அற்புதமான மனித வளம் வீண் விரயமாகின்றது. மனித மாண்பு தறிகெட்டுச் செல்கின்றது. அவற்றை மீட்டெடுக்க எம் பாரம்பரிய கலைகளாலும், நுண் கலைகளாலும் மட்டுமே இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலி சோடா



## திரைவிமர்சனம்

தென்னாசியாவிலேயே மிகப் பெரிய மரக்கறிச் சந்தையான கோயம்பேட்டில் ஆதரவற்ற நான்கு சிறுவர்களான கிஷோர், பாண்டி, முருகேஷ், ஸ்ரீராம் ஆகியோர் மூடை தூக்கி பிழைப்பு நடத்தி வருகிறார்கள்.

இவர்கள் சந்தையில் சிறு வியாபாரம் செய்யும் சுஜாதாவிடம் வேலை செய்து வருகிறார்கள். இவர்களுக்கென்று எந்தவிதக் குறிக்கோளும் இல்லாமல் பள்ளி மாணவிகளை கேலி,கிண்டல் செய்வதும் உழைக்கும் பணத்தைக் கொண்டு தாம் தூம் என்று செலவு செய்து பொழுதைக் கழிப்பதுமாகவும் இருக்கிறார்கள்.

இந்தநிலையில் ஒருநாள் சுஜாதாவின் மகள் சாந்தினியைத் தெரியாமல் கிண்டல் செய்ய, அதைப் பார்க்கும் சுஜாதா அவர்களை திட்டி தீர்த்து விடுகிறார். அதற்கு சிறுவர்கள், நாங்கள் அனாதையாகப் பிறந்தது தப்பா? என்று கேட்க, அதற்கு சுஜாதா நீங்கள் பிறந்தது தப்பில்லை.தனக்கென்று அடையாளம் இல்லாமல் வாழ்வதுதான் தப்பு என்று கூறுகிறார். இதனால் நான்கு சிறுவர்களும் தமக்கென்று ஒரு அடையாளம் வேண்டும் என்ற நோக்கத்தில் சுயதொழில் செய்ய முடிவெடுக்கிறார்கள். இவர்களின் ஆர்வத்தைப் பார்த்து சுஜாதா அதே சந்தையில் கந்துவட்டிக்கு பணம் கொடுக்கும் நாயரிடம் அழைத்துச் சென்று இவர்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கூறுகிறார்.

அதற்கு நாயர் சந்தையில் உள்ள எனது கடையை எடுத்துக்கொள்ளுங்கள், 6 மாதத்துக்குப் பிறகு வாடகையைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று கூறுகிறார்.

அதன்படி, நான்கு பேரும் அங்கு ஆச்சி மெஸ் என்னும் பெயரில் ஹோட்டல் ஒன்றை ஆரம்பிக்கிறார்கள். அது அவர்களுக்கு ஆச்சி மெஸ் சிறுவர்கள் என்ற அடையாளத்தைக் கொடுக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஒரு நாள் இரவில் நாயரின் மச்சான் கடைக்கு வந்து குடித்தல், மற்றும் பெண்களுடன் பாலியல் லீலை ஆகிய செயல்களில் ஈடுபடுகிறான்.

இதைப்பார்க்கும் நான்கு சிறுவர்களும் கோபம் அடைந்து அவருடன் சண்டை போடுகிறார்கள். இந்தச் சண்டையில் சிறுவர்கள் அவரை கடுமையாக தாக்கி விடுகிறார்கள்.

இதனைக் கண்டு கோபப்படும் நாயர், சிறுவர்களைத் தாக்கி அவர்களை வெவ்வெறு மாநிலங்களுக்கு செல்லும் லொறிகளில் போட்டு அவர்களைப் பிரித்து விடுகிறார். எனினும் சிறுவர்களின் தோழியான சீதா ஒரு லொறிச்சாரதி மூலம் நான்கு பேரையும் கண்டுபிடித்து சேர்த்து விடுகிறார்.மீண்டும் ஒன்றிணைந்த 4 சிறுவர்களும் தங்களுக்கு அடையாளத்தை கொடுத்த ஆச்சி மெஸ்ஸை மீட்டார்களா? என்பதே மீதிக்கதை.

கிஷோர், பாண்டி, முருகேஷ், ஸ்ரீராம் ஆகிய நான்கு சிறுவர்களும் மூடை தூக்கும் தொழிலாளர்களாக திறமையாக நடித்திருக்கிறார்கள். கதாபாத்திரங்களுடன் ஒன்றியிருக்கும் அவர்கள், நாயரிடம் சண்டை போடும் காட்சியில் நடிப்பில் மிளிர்கிறார்கள்.

சுஜாதாவின் மகளாக வரும் நாயகி சாந்தினி, முதல் படம் என்று தெரியாத அளவுக்குச் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஏ.டி.எம்-ஆக வரும் சீதா படத்தின் முக்கிய கதாபாத்திரம். தனது துடிப்பான நடிப்பால் அனைவரையும் கவர்ந்திருக்கிறார்.

ஆச்சியாக வரும் சுஜாதா, சிறுவர்களுக்கு ஆலோசனை கூறுவது, அவர்களுக்காக துடிப்பது என அசத்தலான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். குறிப்பாக நாயரிடம் அவமானப்பட்டு உருகும் காட்சிகளில் நடிப்பில் முதிர்ச்சி அடைந்தவர் என்பதை வெளிப்படுத்துகிறார்.

சந்தையில் வண்டி ஓட்டிக்கொண்டும் நான்கு சிறுவர்களுக்கு நண்பனாகவும் வரும் இமான் அண்ணாச்சி படம் முழுக்க நகைச்சுவையோடு வந்து சென்றிருக்கிறார். குறிப்பாக பொலிஸ் நிலையத்தில் குடித்துவிட்டு வசனம் பேசும் காட்சியில், திரையரங்குகளில் சிரிப்பலையை வரவைக்கிறார். நாயராக நடித்திருக்கும் விஜய்முருகன் படத்தின் முன் பகுதியில் சாதுவாகவும் பின்பகுதியில் வில்லத்தனத்தோடும் மிரட்டுகிறார்.விஜய் மில்டன் ஒளிப்பதிவில் மட்டுமல்ல இயக்கத்திலும் பளிச்சிட்டிருக்கிறார். கோயம்பேடுச் சந்தை வாழ்வியலை யதார்த்தமாகவும் கதையை அழுத்தமாகவும் சொல்லியிருப்பது சிறப்பு.

காட்சிகளை தொய்வில்லாமல் விறுவிறுப்பாக நகர்த்திருப்பது படத்திற்கு மேலும் பலம். பாண்டிராஜின் வசனங்கள் படத்திற்கு கூடுதல் வீச்சைக் கொடுக்கின்றன. மொத்தத்தில் கோலிசோடா சுவைதான்.

## அடுத்த படம்

'இது கதிர்வேலன் காதல் படத்தில் அப்பாவுக்குப் பயந்த இளைஞராக ஆஞ்சநேயபக்தராக வருகிறார் உதயநிதி. அவருக்குத் தைரியம் கொடுத்துக் காதலிக்கவைப்பவர் சந்தானம். படம் நன்றாக வந்திருப்பதால், 'அடுத்த படத்துக்கும் இயக்கம் எஸ்.ஆர். பிரபாகரன்தான் என்று முற்பணம் கொடுத்துவிட்டார் உதயநிதி. ஆனால் அடுத்தபடத்தில் நாயகன் உதயநிதி இல்லை. அதில் நாயகனாக நடிக்க சிவ கார்த்திகேயனிடம் பேசி வருகிறார்கள்.

## கவர்ச்சி இல்லை

ஹன்சிகா இனிமேல் படங்களில் கவர்ச்சியைக் குறைக்க முடிவு செய்துள்ளார். 'அரண்மனை படத்தில் நகைச்சுவையிலும் அவர் கலக்குகிறாராம். அமெரிக்கா சென்று வந்தாலும் ஹன்ஸிக்கு பிடித்த இடம் சுவிஸ்தான். 'மான்கராத்தேபடத்தில் சிவ கார்த்திகேயனோடு நெருக்கமான காதல் காட்சி எதுவும் அவருக்கு இல்லையாம்.இதனால் சிம்புவுக்கு மிகவும் சந்தோசமாம்.



## பார்த்திபன் பாடும் புராணம்

இயக்குநரும், நடிகருமான பார்த்திபன் நீண்ட இடைவெளிக்குப் பிறகு கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் எ[ன்ற] வித்தியாசமான தலைப்பில் படம் ஒன்றை இயக்கி வருகிறார். இந்தப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடை[பெற்று] வருகிறது. இதில் நடிகர் விஜய் சேதுபதி சிறப்புத் தோற்றத்தில் நடிக்கவிருக்கிறாராம்.

இதுகுறித்து பார்த்திபன் கூறும்போது,

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்படத்தில் நடிக்க வேண்டும் என்று கேட்ட மறுநாளே படப்பிடிப்புப் தளத்[தில்] விஜய் சேதுபதி வந்து நின்றார். மன்னிக்கவும், உட்கார்ந்தார். அதுவும் காரில் வந்தால் ரொம்ப நேரம் ஆகிவிடும் என்பதால் மோட்டார்சைக்கிளிலேயே வந்தார். என்று ஒரே விஜய் சேதுபதி புராணம் பாடுகிறார்.

## அடுத்த சூ[ப்பர் ஸ்டார்]

தமிழ் சினிமாவில் உள்ள முன்னணி நடி[கர்]களுக்கிடையே தற்போது பற்றி எரிந்து வரும் ஒ[ரே] விஷயம் அடுத்த சூப்பர் ஸ்ரார் யார் என்பதுதா[ன்]. இந்தத் தள்ளுமுள்ளு காரணமா கத்தான், ரஜி[னி] கமலுக்கு அடுத்தபடியாக முன்னணியில் இருக்[கும்] அஜீத்,விஜய் ஆகியோரின் ரசிகர்களுக் கிடை[யே] அடிக்கடி மோதலும் வெடித்துக் கொண் டி ருக்கிற[து].

தமிழ் சினிமாவில் உள்ள முன்னணி நடிகர்களுக் கிடை[யே] தற்போது பற்றி எரிந்து வரும் ஒரே விஷயம் அடு[த்த] சூப்பர் ஸ்ரார் யார் என்பது தான். இந்தத் தள்ளுமுள்ளு காரணமாகத்தான், ரஜினி, கமலுக்கு அடுத்த ... களுக்கிடையே அடிக் கடி மோதலும் வெடித் துக் கொ[ண்டிருக்கிறது].

தமிழ் சினிமாவில் உள்ள முன்னணி நடிகர்களுக்... ஸ்ரார் யார் என்பதுதான். இந்தத் தள்ளுமுள்ளு... இருக்கும் அஜீத்,விஜய் ஆகியோரின்ரசிகர்களுக்கி[டையே]...

அதனால், விஜய் படம் சம்பந்தப்பட்ட விழாக்... சொல்வதைப் போன்று, அஜீத் வட்டாரத்திலும் அ... கள் தலைவர் ஒருவரே சூப்பர் ஸ்ரார் என்று அவர்...


இந்த பரபரப்பான சூழ்நிலையில்தான், சூர்யா ... என்று சூர்யாவுக்கு பட்டம் சூட்டியிருக்கிறார்கள... இதென்ன புதுசா இருக்கு என்று அஞ்சானை ஆத்...

இதற்கிடையே, சின்ன வயதில் நடித்தபோது வி... ஸ்ரார் என்று தனக்குத்தானே பட்டம் சூட்டிக்... கேட்டுக்கெண்டு நிற்கிறாராம்.

ஆக, கோடம்பாக்கத்தில் சூப்பர் ஸ்ரார் பட்... முன்வைத்து மீண்டும் பரபரப்பு நெருப்பு பற்றி... தொடங்கிவிட்டது.

## நாயகிகளின் சம[ர்]

தெலுங்குப் படங்களில் நடிக்கும்போதே ஸ்ரீதிவ்யாவுக்கும் ரஷிதாவுக்கும் முட்டல் மோதல். தமிழில் ஸ்ரீதிவ்யா வருத்தப்படா[த] வாலிபர் சங்கத்தின் பின்னர் ஓ...ரா என்[று] வந்துவிட்டார். இந்தநிலையில் பிரபுசாலமன் படமான 'கயல் படம் மூல[ம்] ஆனந்தி என்ற பெயரில் அறிமுகமாகிறார்ரஷிதா. 2015இல் இவர்களின் ஏட்டிக்குப் போட்டிதான் தமி[ழ்] சினிமாவைக் கலக்கப்போகி[றது] என்[று] இப்போதே ஆருடம் சொல்கிறார்கள்.



## வில்லனாகும் கார்த்தி[க்]

2012 ஆம் ஆண்டு வெளியான மாற்றான் படத்துக்கு[ப்] பிறகு கே.வி.ஆனந்த் இயக்கும் புதிய படம் அனேகன். இந்தப்படத்தில் தனுஷ் நாயகனாக நடிக்கிறார். நாயகியா[க] அமிரா தஸ்தூர் நடிக்கிறார்.

அனேகன் என்றால் உருவத்தில் ஒன்றானவன், வீரத்தில் பலவானவன் என்று பொருளாம். அதற்கேற்றாற்போல் இந்தப்படத்தில் தனுஷ் சென்னையில் வாழும் சேரிப்புற இளைஞனாகவும், சுருட்டை முடியுடனும், கராத்தே வீரராகவும், நவநாகரீகத் தோற்றத்துடனும் வருகிறார்.இ[ந்தப்] படத்தில் நடிகர் கார்த்திக் வில்லனாக நடிக்கிறாராம். இவருக்கு மங்காத்தா படத்தில் அஜீத் நடித்திருந்தது போ[ல] வித்தியாசமான வில்லன் கதாபாத்திரமாம்.

அனேகன் படத்தை ஏ.ஜி.எஸ். நிறுவனம் பிரமாண்டமாகத் தயாரிக்கிறது. மாற்றான் படத்தைத் தொடர்ந்து கே.வி.ஆனந்துடன் மீண்டும் கைகோர்த்துள்[ளது] இந்தநிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ... சூப்பர்ஸ்ரார் யார்?



...ணி நடிகர்
... வரும் ஒரே
... என்பதுதான்.
...தான், ரஜினி,
...ல் இருக் கும்
...க் கிடையே
...டி ருக்கிறது.
...களுக்கிடையே
...ஷயம் அடுத்த
...ள்ளுமுள்ளு
... அடுத்த படியாக முன்னணியில் இருக்கும் அஜீத்,விஜய் ஆகியோரின்ரசிகர்
...த் துக் கொண்டி ருக்கிறது.
...டிகர்களுக்கிடையே தற்போது பற்றி எரிந்து வரும் ஒரே விஷயம் அடுத்த சூப்பர்
...ளுமுள்ளு காரணமாகத்தான், ரஜினி, கமலுக்கு அடுத்தபடியாக முன்னணியில்
...ர்களுக்கிடையே அடிக்கடி மோதலும் வெடித்துக்கொண்டிருக்கிறது.
...ட விழாக்களில், அவரது அபிமானிகள் அவரை அடுத்த சூப்பர் ஸ்ரார் என்று
...திலும் அவரை அடுத்த சூப்பர் ஸ்ரார் என்கிறார்கள். ஆனால் ரஜினி ரசிகர்களோ, எங்
...ன்று அவர்கள் ஒரு பக்கம் கொடிபிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.
..., சூர்யா நடிக்கும் 'அஞ்சான் படத்தை தயாரிப்பவர்கள் தென்னக சூப்பர் ஸ்ரார்
...கிறார்களாம். இதனால் ஏற்கனவே தள்ளுமுள்ளுவில் இருக்கும் அத்தனை பேரும்
...னை ஆத்திரத்தோடு பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.
...போது லிட்டில் சூப்பர் ஸ்ரார் என்றும் ,பின்னர் இளைஞனானபோது யங் சூப்பர்
... சூட்டிக்கொண்டு வரும் சிம்பு, அப்படி என்றால் நான் என்ன ஸ்ரார்? என்று
...ரார் பட்டத்தை
...பு பற்றியெரியத்

## ... சமர்

...க்கும்போதே
...ம் முட்டல்
...நத்தப்படாத
...ோரா என்று
...லயில்
...படம் மூலம்
...ல்
... 15இல்
...தான் தமிழ்
... என்ற
...றோர்கள்.

...இயக்கம் என்ற
...ாக நடைபெற்று

...ப்புப் தளத்துக்கு
...கிவிடும்

## ...த்திக்

...டத்துக்குப்
...னேகன்.
... நாயகியாக

...ன், வீரத்தில்
...ற்போல்
... சேரிப்புற
...ாத்தே
...ருகிறார்.இந்தப்
...ராம்.
...ந்தது போன்ற

...த்தைத்
...கோர்த்துள்ளது

# கல கல பேட்டி



அழகச்சாமியின் குதிரை, 'சுந்தர பாண்டியன், 'ரம்மி எனத் தொடர்ச்சியாகப் படங்களில் நடித்துவரும் இளைய நடிகர் இனிகோ பிரபா கரனுடன் ஓர் அரட்டை.

**கேள்வி- உங்களைப் பற்றிக் கொஞ்சம்......?**

அழகச்சாமியின் குதிரை, 'சுந்தர பாண்டி யன், 'ரம்மி எனத் தொடர்ச்சியாகப் படங் களில் நடித்துவரும் இளைய நடிகர் இனிகோ பிரபாகரனுடன் ஓர் அரட்டை.

**கேள்வி- உங்களைப் பற்றிக் கொஞ்சம்......?**

பதில்- திருநெல்வேலிக்குப் பக்கத்தில் முத்துலாபுரம்தான் என்னுடைய சொந்த ஊர். மதிய நேரத்திலும் குயிலும் சேவலும் கூவுகிற கிராமம்.

அழகச்சாமியின் குதிரை, 'சுந்தரபாண்டியன்,'ரம்மி எனத் தொடர்ச்சியாகப் படங்களில் நடித்து வரும் இளைய நடிகர் இனிகோ பிரபாகரனுடன் ஓர் அரட்டை.

**கேள்வி- உங்களைப் பற்றிக் கொஞ்சம்......?**

பதில்- திருநெல்வேலிக்குப் பக்கத்தில் முத்துலாபுரம்தான் என்னுடைய சொந்த ஊர்.மதிய நேரத்திலும் குயிலும் சேவலும் கூவுகிற கிராமம். ஊர்த் திருவிழாவில் போடுவதை சின்ன வயதிலேயே பார்த்த எனக்கு, நடிப்பு மீது ஆசை வந்துவிட்டது. அதனால், நான் இல்லாத பள்ளி நாடகங்கள் கிடையாது. என் ஆசையெல் லாம் எப்படியாவது பெரிய நடிகன் ஆகவேண்டும் என்பதுதான். வாழ்க்கையில் முட்டி மோதி இப்போது நான் ஒரு நடிகனாகி விட்டேன்.

சினிமாதான் இலக்கு என்று முடிவு செய்த பின்னர் நம்பிக்கையோடு காத்திருந்தேன். முத லில் நிறைய ஏமாற்றங்கள். 'வெண்ணிலா கபடிக் குழு படத்தில் நான்தான் நாயகனாக நடிக்க இருந்தேன். ஆனால்,சில காரணங்களால் அந்தச் சந்தர்ப்பம் நழுவிவிட்டது.என்றாலும் 'அழகர் சாமி யின் குதிரையில் முக்கிய பாத்திரம் கிடைத்தது. அடுத்து 'சுந்தரபாண்டியன் படத்தைப் பார்த்தவர் களுக்கு, என்னுடைய முகம் முழுசாகப் பதிந்தது. அடுத்து வரப்போகும் 'ரம்மிபடம் என் சினிமா வாழ்வில் ஒரு மைல் கல்லாக இருக்கும்.

**கேள்வி- உங்கள் வயதையொத்த அண்மை யில் அறிமுகமாகி பிரகாசித்துக் கொண்டிருக்கும் நடிகர்களைப் பார்த்தால் பொறாமையா இருக் குமே?**

பதில்- நான் ஏன் பொறாமைப்பட வேண்டும்? விஜய் சேதுபதி, தினேஷ் என்று ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமாக அடிச்சு விளையாடுவதைப் பார்த்துக் கைதட்டி ரசிக்கத்தான் தோன்றுகிறது. அவர்களுக்குக் கிடைத்த மாதிரி, எனக்கும் சந்தர்ப்பம் ஒரு நாள் கிடைக்கும். அதுவரை காத்திருப்பதில் தவறில்லையே.

**கேள்வி- முதல் படத்தில் லட்சத்தில் சம்பளம் வாங்கும் நடிகர்கள் அது வெற்றிபெற்று விட்டால் அடுத்து கோடியில் தான் சம்பளம் வேண்டும் என்கிறார்கள். நீங்கள் எப்படி?**

பதில்- படத்தில் நாயகனாக நடிப்பதை விட, கதையின் நாயகனாக நடிக்க வேண்டும். அதுதான் என் ஆசை. அந்த மாதிரிக் கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தாலே போதும். அந்த வாய்ப்புதான், நான் வாங்கும் சம்பளத்துக்கான முற்பணம்.

**கேள்வி- உங்கள் பெயர் மிகவும் நன்றாக இருக்கிறதே. உண்மையான பெயர்தானா?"**

பதில்- இனிகோ மட்டும்தான் என் சொந்தப் பெயர். இலங்கைத் தமிழர்களின் விடுத லைக் காகப் போரடிய பிரபாகரனை எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால்தான் என் பெயரை இனிகோ பிரபாகரன் என்று மாற்றிக் கொண்டேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவைத் திறந்தவன்

38

ஔண்யன்






மக்களை வதைத்த நாடுகள், நபர்கள் என்போரின் வெறுப்பை தன்னுடைய இணையத் திருவிளையாடல்கள் மூலம் அளவுகணக்கில்லாமல் சம்பாதித்து வைத்துக் கொண்டதைப்போல , இன்னொரு பக்கத்தில் அதை விடவும் அதிகமானோரின் அபிமானத்தையும் யூலியன் வென்றிருந்தான். அந்த அபிமானிகளால் யூலியனின் சிறைவாசத்தைத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. எவ்வாறு விக்கிலீக்ஸுக்கான மிரர் இணையத்தளங்கள் கண்ணிமைக்கும் பொழுதில் ஒன்று நூறாகி, நூறு ஆயிரமாகினவோ அவ்வாறே யூலியன் அசாஞ்சே அபிமானிகளும் பல்கிப்பெருகினர். அத்தோடு அவர்கள் பெயரிலிகள் இணைய 'நற்பணி மன்றம்' (anonymous) என்று தங்களை அழைத்துக் கொண்ட குழுவாகவும் ஒன்றிணைந்தனர்.

வெறுமனே கூட்டம் கூடி விட்டுக் கலைந்து செல்லும் குழுவாக இல்லாமல் யூலியனின் கைதுக்கு பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதெனப் 'பெயரிலிகள் நற்பணி மன்றம்' தீர்மானித்தது. யூலியனின் திறமையைக் கண்டு வளர்ந்த ஏகலைவர்கள் அல்லவா அவர்கள். எனவே மிகக் குறுகிய நாள்களில் அவர்கள் ஒரு இணையவைரஸை உருவாக்கினார்கள். அந்த வைரஸின் கோபப்பார்வை யூலியனை முடக்கியவர்களிலேயே முக்கியமானவர்களான வீசா(VISA) மற்றும் மாஸ்டர் கார்ட் (MasterCard) பக்கம் திரும்பியது. வெறும் கணினியும், இணைய இணைப்பும் வைத்துக் கொண்டு சிறிய அறைக்குள் செயற்படுபவர்களால் மிகப்பெரிய நிறுவனங்களை என்ன செய்துவிட முடியும் என்று நினைத்தவர்கள் அனைவரையும் வாய் பிளக்கும் வகையிலான இணையப்போர் காதும் காதும் வைத்தது போல் நடந்து முடிந்தது.

இந்த இணையச்சண்டைக்கு பெயரிலிகள் இணைய நற்பணி மன்றம், ஒப்பிறேஷன் பேஃபக் (Operation Payback) என்று பெயரிட்டு நடத்தியது. அவர்களால் உருவாக்கப்பட்ட டீ.டீ.ஓ.எஸ் (DDoSd Distributed Denial of Service) என்ற இணையக் குட்டிச்சாத்தான்(வைரஸ்), வீசா கார்ட் மற்றும் மாஸ்ரர் கார்ட் இணையத் தளங்களின் மேல் மூர்க்கமாக ஏவி விடப்பட்டது. டீ.டீ.ஓ.எஸ் வைரஸ் தாக்குதல் என்பது அதீதமான போக்குவரத்து நெரிசலால் வீதிப்போக்குவரத்து திடீரென முடங்குவது போன்ற செயற்பாட்டைக் கொண்டதுதான். 1996 ஆம் ஆண்டு குடாநாட்டில் இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வின் போது செம்மணி வீதியில் ஒரே சமயத்தில் லட்சக்கணக்கான மக்கள் நகர முயன்றபோது ஏற்பட்ட நிலையை ஞாபகப்படுத்தினால் இன்னும் சுலபமாக இந்த டீ.டீ.ஓ.எஸ் வைரஸின் தொழிற்பாடு புரிந்துவிடும். தன்பாட்டுக்கு தங்கு தடையின்றி இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு இணையத்தளத்தினை நோக்கி பல்வேறு கணினிகளில் இருந்து ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான தகவல் இணைப்புகளை அனுப்பி போலியான இணையப் போக்குவரத்தினை அளவுக்கு மீறி ஏற்படுத்துவதன் கொடுமை தாங்காமல், தாக்குதலுக்கு உள்ளாகும் இணைய தளத்தின் வழங்கி குப்புறப்படுத்துக் கொள்ளும். அவ்வாறு நிகழ்ந்தால் அதனைத் தட்டியெழுப்ப நீண்ட நேரமும் . பெரும் பணமும் தேவை. இத்தாக்குதலை தொடுப்பதற்கென சிறப்பு மென்பொருள்கள் உள்ளன.

ஒப்பிறேஷன் பேஃபக் தாக்குதலில்,. வீசா கார்ட் மற்றும் மாஸ்ரர் கார்ட் என்பவற்றின் இணையத்தளங்கள் வெற்றிகரமாக முடக்கப்பட்டன. அதேவேளை அமெரிக்காவில் விக்கிலீக்ஸுக்கான வழங்கல் சேவையை இடைநிறுத்திய அமேசன் நிறுவனத்தின் மீது இலவச இணைப்பாகத் தொடுக்கப்பட்ட டீ.டீ.ஓ.எஸ் வைரஸின் தாக்குதலை அத்தளம் நீண்ட நேரப் போராட்டத்தின் பின்பு சமாளித்தது. ஒருபுறம் பெயரிலிகள் இணைய நற்பணி மன்றம், விக்கிலீக்ஸையும் யூலியனையும் வீழ்த்த முயன்றவர்கள் மீது தாக்குதலை நடத்தியபடி முன்னேறிக் கொண்டிருக்க, பின்புறமாக ஊடுவிய சி.ஐ.ஏ, விக்கிலீக்ஸ் தளத்தின் மீது டீ.டீ.ஓ.எஸ் பாணியிலான திசைதிருப்பும் தாக்குதலை எதிர்பாராத நேரத்தில் நடத்தியது. எனினும் இவ்வாறான முதுகில் குத்தும் முயற்சியில் சி.ஐ.ஏ இறங்கலாம் என ஊகித்து , தயாராகப் பதுங்கியிருந்த பெயரிலிகள் நற்பணி மன்றத்தின் விசேட படையணி அத்தாக்குதலை ஊதித்தள்ளுவது போல எடுத்த எடுப்பிலேயே தோல்வியுறச் செய்தது. இவை போதாதென்று யூலியனின் அபிமானிகள் வீதிகளிலும் இறங்கிப் போராட்த்தொடங்கினர். சில இடங்களில் வீசா கார்ட் மற்றும் மாஸ்ரர் கார்ட் என்பவற்றின் அலுவலங்கள் அடித்து நொருக்கப்பட்டன.

வெளியே இத்தன்ன போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கையில் சிறையில் யூலியனின் கதி என்ன?

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

## தேன் முறுக்கு இருக்கோ? — கணேரூபன்

நேர்சரியில இருக்கிற நேரமெல்லாம் 'பங்' தேன் முறுக்கப் பற்றித்தான் யோசிச்சுக் கொண்டிருப்பான்.

ஒரு சிநேகிதப் பெட்டை அம்மன் கோயில் திருவிழாவில வாங்கியந்து நேர்சரியில வச்சுத் தந்ததில இருந்து, பங்கின்ர வாயில அந்த ரேஸ்ட் ஒட்டீட்டுது. மனசு தேன்முறுக்குக்காக ஏங்கித் தவிச்சுது.

எண்டாலும் அம்மா, அப்பாவுக்கு 'பங்' சரியான பயம். கையப் பிடிச்சு நேர்சரியில கொண்டந்து விட்டுட்டுக் கையப் பிடிச்சே வீட்டை கொண்டு போறவை. கடைசி வரைக்கும் எங்கயும் எப்பவும் ஒண்டும் –அதிலும் குறிப்பா 'சுகாதாரமற்ற' அயிட்டமான தேன்முறுக்கு– வாங்கிக் குடுக்கவே மாட்டினம்.

. அப்ப நேர்சரியில நிக்கேக்கதான், அதுவும் நேர்சரி ரீச்சர் சாப்பிடுற அந்த 10 நிமிசத்துக்குள்ளதான் எங்கையாவது களவா ஓடிப் போய் வாங்கிச் சாப்பிடோனும்.

அண்டைக்கு நைசா கழண்டு பக்கத்தில இருந்த அந்தக் கடைக்குப் போய்,

"அண்ணை, தேன்முறுக்கு இருக்கே?" – எண்டு தேப்பன்ர பேர்ஸுக்குள்ள ஆட்டைய போட்டு வச்ச 20 ரூவாத் தாளை 'பங்' நீட்டினான்.

ஆனால் அவன்ர கஷ்ட காலத்துக்கு அந்த ஏரியாவில இருந்தது ஒரே ஒரு கடை. அதுவும் ஒரு ஹார்ட்வெயார் கடை(இரும்புக்கடை).

"இஞ்ச ஒண்டும் இல்ல, ஓர்றா!" எண்டு சொல்லிக் கடைக்காரன் கலைச்சு விட்டுட்டான்.

'பங்' ஏமாற்றத்தோட திரும்பி ஓடியந்துட்டான்.

அடுத்த நாளும் நேர்சரி ரீச்சர் சாப்பிடேக்க களவா எஸ்கேப்ஆகி ஓடிப் போய்,

"அண்ணை தேன் முறுக்கு இருக்கோ?" எண்டு அதே கடையில கேட்டான்.

கடைக்காரனுக்குக் கோவம் வந்துட்டுது.

"அடேய் இஞ்ச பத்திஞ்சி ஆணிதான் கிடக்கு. உன்னைத் தூக்கி அறைஞ்சு கடை வாசல்ல இறுக்கி விட்டுடுவன்! ஓர்றா இஞ்ச இருந்து!" – எண்டு துரத்தியடிச்சிட்டான்.

பாவம் 'பங்.' பயங்கரச் சோகம்.

அடுத்த நாளும் களவா ஓடிப் போய் ,அதே கடையில இப்பிடிக் கேட்டான்.

"அண்ணை, பத்திஞ்சி ஆணி இருக்கோ?"

கடைக்காரன் 'பாவம் பெடி உண்மையாத்தான் கேக்குது போல' எண்டிட்டு தேடுதேடெண்டு தேடிப்போட்டு, வருத்தமாய்ச் சொன்னான்.

"இல்லையடாப்பா, இண்டைக்கெண்டு பாத்து உண்ட காலத்துக்கு இல்ல."

உடன 'பங்' முகம் பிரகாசமாக, சந்தோசமாய் கேட்டான்:

"அப்ப தேன்முறுக்கு இருக்கே!?"

**( நன்றி - கதை சொல்லடா தமிழா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வைத் தின்னும் பணம்!

**போ**ன சனிக்கிழமை என்னுடையு கணவரும் மகனும் ரவுணுக்குப் போக வெளிக்கிட்டார்கள். என்னையும் அழைத்தார்கள். ஆனால் எனக்கு கொஞ்ச வேலை இருந்ததால் என்னால் அவர்களுடன் போக முடிய வில்லை. அவர்களை அனுப்பிவிட்டு வேலையில் மூழ்கியிருந்தேன். பத்து நிமிடங்கள் போயிருக்கும்.

"என்ன சரியான வேலை போல?" என்று கேட்டுக் கொண்டு பக்கத்துவீட்டு கமலாக்கா வந்தா.

''வாங்கோ அக்கா.சும்மா உப்பிடித்தான் கொஞ்ச வேலை கிடந்தது'' என்றபடி என்னுடைய பைல்களை மூடி வைத்தேன்.

இனி வேலை செய்ய முடியாதே. கமலாக்கா பக்கத்து வீட்டில் தொடங்கி உள்ளநாட்டுப் புதினம் எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தா. அப்பதான் எனக்கு ஞாபகம் வந்தது.நேற்று அவாட வீட்டில ஏதோ விசேசம் போல.ஒரே தடல்புடலா இருந்தது.எனக்கும் வேலைக்கு அவசரம் எண்டதால நானும் ஒரு சொல்லுக்கு கூட ஏதேனும் உதவி வேணுமோ எண்டு கேட்கயில்ல.

"அக்கா உங்கட வீட்ட நேற்று ஏதேனும் விசேசமோ ஒரே ஆரவாரமா இருந்தது" என்றேன்.

''ஓ! உவள் விதுவுக்கு ஒரு சம்மந்தம் வந்தது. அதுதான்.." என்றா கமலாக்கா.

''ஆர் விதுவுக்கோ? விதுவுக்கு இப்ப என்னக்கா அவசரம். சின்னப்பிள்ள தானே அவள்'' என்றேன் நான்.

விது போனவருசம் தான் ஏ.எல் எக்ஸாம் எடுத்து விட்டு வெளிவாரியாக சட்டப்படிப்பை தெரிவு செய்திருந்தாள். நல்ல கெட்டிக்காரி. இப்போது இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கிறாள். இன்னும் குழந்தைத் தனம் மாறாத அவளுடைய செயற்பாடும் அப்பழுக்கற்ற நடவடிக்கையும் ஊரில் அவளுக்கொரு நல்ல மதிப்பையும் அன்பையும் பெற்றுக் கொடுத்திருந்தன. அவளுக்கு இப்போது கல்யாணத்துக்கு என்ன அவசரம் வந்துவிட்டது. எனக்கு குழப்பமாக இருந்தது. நான் கமலாக்காவிடமே கேட்டுவிட்டேன்.

''விதுவுக்கு இப்ப கல்யாணத்துக்கு என்னக்கா அவசரம்.?"

"இல்ல கமலா. பெடியன் பிரான்ஸ்ல. வீட்டுக்கு ஒரே பெடியன் தானாம். குடும்பமா அங்க தானாம்.. அவையாத் தான் கேட்டுவந்தவை.. வெளிநாட்டுச் சம்மந்தத்த காக்கவைச்சால் அவங்கள் பிறகு வேற யாரையும் பார்த்துக்கொண்டு போயிடுவாங்கள்.."

எனக்கு இதற்கு என்னசொல்வது என்று புரியவேயில்லை. இன்னும் துடுக்குத்தனம் மாறாமல் சுத்திக்கொண்டிருக்கும் விதுவுக்கு அவசர அவசரமாக வெளிநாட்டுக் கல்யாணம் எதற்கு..? அவள் படித்துமுடித்தபின் செய்யலாமே என்று சொல்ல மனம் தோன்றியது. ஆனால் ஒரு நல்ல காரியம் நடக்கையில் இடையில் அப்படி சொல்வது சரியில்லை என்பதாலேயே பேசாமல் விட்டுவிட்டேன்.

**இருபத்தொன்றுக்கும் முப்பத் தைந்துக்கும் இடையில் எவ்வளவு பெரிய இடைவெளி. ஒரு மகளுக் கும் சிறியதந்தைக்குமான இடை வெளி. என்னால் ஏற்றுக் கொள் ளவே முடியவில்லை.**

"ஆனால் அக்கா. இப்ப நிச்சயம் பண்ணிப்போட்டு அவள் படிச்சுமுடியச் செய்தா என்னக்கா?" கேட்டே விட்டேன்.

''இல்ல கமலா பெடியனுக்கு இப்பவே முப்பத் தைஞ்சு வயசாச்சு. அதாலதான் அவசரமா உடனே செய்யவேணு மெண்டு அவை கேட்கினம்.."

முப்பத்தைஞ்சு வயசா இல்லை என் காதில் தானா பிழை.? இருபத்தொன்றுக்கும் முப்பத்தைந்துக்கும் இடையில் எவ்வளவு பெரிய இடைவெளி. ஒரு மகளுக்கும் சிறிய தந்தைக்குமான இடைவெளி. என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. தொண்டைக்குழி வரண்டது போல இருந்தது.

"விதுவுக்கு சம்மதமா?" நான் தான் கேட்டேன்.

"நீங்க பார்த்தா சரியம்மா எண்டு அவள் சொல்லிப்போட்டாள்.."

இளைஞர்கள் தங்கள் வாழ்வை தாங்களே தீர்மானித்துக்கொள்கின்ற இந்தக் காலத்திலும் இன்னும் எங்களினுடைய குழந்தைகள் எங்களை எவ்வளவு தூரம் நம்புகிறார்கள்.ஆனால் நாங்கள் பணத்துக்கும் ஆடம்பர வாழ்க் கைக்கும் ஆசைப்பட்டு அவர் களுக்குத் துரோகம் செய்யப் போகிறோமா.? மனம் ஆற மறுத்தது. அந்த நேரம் வகுப்பு முடிந்து விது வீட்டுக்குப் போவது தெரிந்தது.

''சரி. அக்கா விது போறாள். போன உடனே குழந்தைப் பிள்ளை மாதிரி ரீ கேட்பாள். நான் போயிட்டு வாறன்'' என்றபடி என் பதிலுக்கு காத்திருக்காமல் கமலாக்கா எழும்பினா. நானும் தான் என்ன பதிலைச் சொல் வது..?

எனக்குள் பெரியதொரு சந் தேகம் வந்து ஒட்டிக் கொண்டது.

**பணத்திற்காக வாழ்க்கையா..?**
**வாழ்க்கைக்காக பணமா?**




# ஓரினச் சேர்க்கை தேவையா?

இப்போது ஊடகங்களில் ஓரினச் சேர்க்கை பற்றிய செய்திகள் பர வலாக வந்துகொண்டேயிருக்கின் றன. ஒரு சில நாடுகளில் அது ஏற் றுக் கொள்ளப்பட்டிருந்தாலும் உலகம் பூராகவும் பொதுவாக அதை விரும் பாத தன்மையே காணப்படுகின்றது. இயல்பான குடும்ப வாழ்க்கைக்கு முரணாக அத்தகைய உறவுநிலை யினை எதற்காக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதிலும் குறிப்பாக பல்வேறு பட்ட பொருளாதார சமூக சிக்கல் களைக் கொண்டுள்ள இலங்கையி லும் இது தொடர்பான சம்பவங் கள் பதிவாகியுள்ளதை கவனத்திற் கொள்ள



வேண்டும்; அத்தகைய சம்பவங்களி லும் துரதிர்ஷ்டவசமாக பெண்கள் தொடர்புபட் டதாக இந்தச்செய்திகள் வெளிவரு வது கவலையளிக்கக்கூடிய ஒன்றே. ஏனெனில் சமூகத்தை வலுப் படுத்தி நிறுவவேண்டிய பொறுப்பு பெண் களிடம் தான் உள்ளது.

மாத்தறை சுனங்க என்ற பிர தேசத்திலுள்ள புரகல் துவ என்ற இடத்தில் 17-12-20013 அன்று நடந்த அசிட் வீச்சுக்கும் அதன் பின்னர் ஏற்பட்ட ஒரு உயிரிழப்புக் கும் இரு பெண்களின் ஓரினச் சேர்க்கை உறவே கார ணமாயமைந் துள்ளது.

அதுபோல சீனாவில் கோடீஸ்வரர் ஒருவர் தன்னுடைய ஓரினச் சேர்க்கையாளரான மகளை சாதாரண குடும்ப வாழ்க்கை நோக்கி திருப்புகின்ற ஆட வருக்கு 815 கோடி சன்மானம் குறித்திருப் பதும் பெண்களின் நிலையை தெளிவாக காட்டுகிறது.

ஏதற்காக இந்த வீண் நடவடிக்கை? வாழ்க்கை ஒருமுறை தான் வரும். அதை எல்லோரும் மகி ழும்படி, மதிக்கும்படி வாழவேண்டாமா? வீட் டுக்கு மட்டுமன்றி நாட் டுக்கும் நற்பெயரைக் கொடுக்க வேண்டாமா? வாழ்க்கை அழகானது. அதை அழகாக வாழக் கற்றுக்கொள்வதில் தான் உங்களின் வெற்றி தங்கி யுள்ளது.

மனித வாழ்க்கை மகத்தானது. மதிப்புடன் வாழ்ந்தால் நிகரிலாதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச்சம்பவம்

# ஒரு ஆசை: மூன்று கொலைகள்

– புலனி

**சிந்துவும் தாயும் எரிந்த நிலையில் சட லங்களாகக் கிடந்தார் கள். பொலிஸார் அதற்கு மேலும் தாமதிக்க விரும்பவில்லை. உடனடியாகவே தேடுதல் வேட்டையில் இறங்கினர்.**

**சி**ந்துவுக்கு கைகால் எல்லாம் நடுங்கியது. பயத்தோடு பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி ஊடாகத் தொடர்பை ஏற்படுத்தினாள்.

"ஹலோ. நான் திருகோணமலையில் இருந்து சிந்து பேசுகிறேன். எனது... அப்பாவை... யாரோ... கொலை... செய்து... விட்டார்கள்" என்று திக்கித்திணறிச் சொல்லி முடித்தாள்.

அது திருகோணமலையில் உள்ள பொலிஸ் நிலையமாக இருந்தபோதும் தமிழ் தெரிந்தவர்கள் அப்போது அங்கு இருக்க வில்லை. எனவே சிந்து சொல்வது அவர்களுக்கு அரைகுறையாகத்தான் புரிந்தது.

என்றாலும் அவளுடைய முகவரியை தெரிந்துகொண்டு உடனடியாகவே ஜீப்பில் ஏறிப்பறந்தார்கள். வீட்டினுள் அவர்கள் கண்ட காட்சி ஒருகணம் திடுக்கிட வைத்தது. நடுத்தர வயதுடைய ஒருவர் இரத்த வெள்ளத்திலே மிதந்தபடி கிடந்தார்.

பார்த்தவுடனேயே அவரது உடலில் உயிரில்லை என்பது புரிந்தது. தடயம் ஏதாவது சிக்குகிறதா என்று பொலிஸார் நோட்டமிட்டனர். இறந்தவரின் கைவிரல்களில் இன்னொரு ஆணின் உரோமங்கள் இருந்தன. தன் உயிரைக்காக்க அவர் போராடிய போது கொலையாளியின் உரோமங்கள் அவர் கையில் இப்படி சிக்கியிருக்கலாம்.

தடயங்களைச் சேகரித்த பின்னர் பிணத்தை பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பிவிட்டு விசாரணையில் இறங்கினர் பொலிஸார்.

அந்த வீட்டில் இறந்து போனவரும் அவரது மனைவியும் மகளும்தான் வசித்திருக் கிறார்கள். மகளின் பெயர் தான் சிந்து. மற்றப்பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டு கடைசி மகளோடு அவர் வாழ்ந்து வந்திருக்கிறார். இந்த நிலையில் ஏன் அவர் கொலை செய்யப்பட்டார் என்பதோ, யார் செய்தார்கள் என்பதோ பொலிஸாருக்குப் பிடிபடவில்லை.

விசாரணைகளுக்காக ஒருநாள் பொலிஸார் சிந்துவீட்டுக்குச் சென்றார்கள். அப்போது 30 வயது மதிக்கத்தக்க ஆணொருவன் சிந்துவோடும் அவர் தாயோடும் சிரித்துப் பேசியபடி இருந்தான். பொலிஸின் பார்வை அவன் மீது விழுந்தது.

"யார் இவர்? உங்களின் உறவுக்காரரா?" என்று கேட் டார்கள்.

அதற்கு அவசரத்தனமான குரலில்,

"இல்லை இல்லை. இவர் சிந்து வேலை செய்யும் கொம்பனியில்தான் வேலை செய்கிறார். பெயர் குமார். எங்களோடு நல்ல பழக்கம். கிட்டத்தட்ட எங்கள் குடும்பத்தில் ஒருவர் மாதிரி"என்று சிந்துவின் தாயார் மறுமொழி சொன்னார்.

என்றாலும் பொலிஸாருக்கு ஏதோ ஒரு உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது. வீட்டுத் தலைவர் இறந்து 10 நாள் கூட ஆவதற்கிடையில் வெளியார் ஒருவருடன் தாயும் மகளும் சகஜமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தமை சந்தேகத்தை உண்டு



பண்ணியது. எனவே சிவில் உடையில் சிந்துவின் வீட்டைப் பொலிஸார் கண்காணிக்கத் தொடங்கினர். அந்தக் கண்காணிப்புக்கு நல்ல பலனும் கிடைத்தது.

"சிந்துவின் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்த குமார் இப்போது அங்கேயே நிரந்தரமாகத் தங்கியிருக்கிறார். பார்ப்பதற்கு அவர் சக அலுவலர் போல நடந்துகொள்ள வில்லை. சிந்துவின் கணவர் போலவே வீட்டில் செயற்படுகிறார். இத்தனைக்கும் குமார் என்ற அந்த நபருக்கு திருமணமாகி இரண்டு பெண்பிள்ளைகளும் இருக்கின்றார்கள்" என்று சிந்துவின் வீட்டைக் கண்காணித்த உளவுப் பொலிஸார் தலைமையகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தனர். கண்காணிப்பு இன்னும் தீவிரமாகியது. இதன் முடிவில் சில திடுக்கிடும் உண்மை கள் வெளிப்பட்டன.

"சிந்துவுக்கும் குமாருக்கும் இடையில் அலுவலகத்தில் தோன்றிய நட்பு கள்ளக் காதலாக விரிந்து நெருக்கமாகிவிட்டது.

இந்தக் கள்ளத் தொடர்பு எப்படியோ குமாரின் மனைவிக்குத் தெரியவந்து விட்டது. அவ்வளவுதான். அதற்குப் பின்னர் தினமும் அவனுக்கும் மனைவிக்கும் ஒரே சண்டைதான். சிந்துவை விட்டுவிடச் சொல்லி குமாரின் மனைவி கெஞ்சினாள். ஆனால் குமார் மறுத்து விட்டான். அதனால் சிந்துவின் வீட்டுக்குப் போய் நியாயம் கேட்டாள் குமாரின் மனைவி.

தனது மகள் திருமணமான ஆணுடன் தகாத உறவு வைத்திருப்பதை அறிந்த தந்தை வெகுண்டெழுந்தார்.

"இனிமேல் அவன் இந்த வீட்டுப் படி மிதிக்கக் கூடாது" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அத்தோடு நில்லாமல் சிந்துவையும் வேலையை விட்டு நிறுத்தி விட்டார். ஆனால் சிந்துவின் தாய் அவளுக்கு ஆதரவாக இருந்தாள். குமார் வசதி படைத்தவனாக இருந்ததாலும், தன்மகள் கர்ப்பமாக இருந்ததாலும் அவனையே மணம் முடிக்க சிந்துவுக்கு அவளின் தாய் பச்சைக்கொடி காட்டியிருந்தாள்.

இந்த நேரத்தில்தான் சிந்துவும் தாயும் குமாரும் சேர்ந்து ஒரு சதித்திட்டம் தீட்டினார்கள். அதன் விளைவுதான் சிந்துவின் தந்தையின் கொலை. ஆனால் இதனை வேறு யாரோ செய்ததாக காட்டிவிட்டு சில நாள்களின் பின்னர் தங்களின் சல்லாபத்தைத் தொடர்வதே குமாரின் திட்டமாக இருந்துள்ளது.

இவ்வளவு தகவலையும் எப்படியோ பொலிஸார் மோப்பம் பிடித்துவிட்டார்கள். இனி மூவரையும் கைது செய்ய வேண்டியது தான் மிச்சம். அடுத்த நாள் காலை சிந்துவின் வீட்டின் முன்னாள் உறுமிக்கொண்டு வந்து நின்றது பொலிஸ் ஜீப்.

கைவிலங்குகளோடு உள்ளே நுழைந்த பொலிஸுக்கு காத்திருந்தது அதிர்ச்சி.

அங்கே...

சிந்துவும் தாயும் எரிந்த நிலையில் சட லங்களாகக் கிடந்தார் கள். பொலிஸார் அதற்கு மேலும் தாமதிக்க விரும்பவில்லை. உடனடியாகவே தேடுதல் வேட்டையில் இறங்கி னர். நண்பன் ஒருவ னின் வீட்டில் பதுங்கி இருந்த குமார் கைது செய்யப்பட்டான். ஆனா லும் இன்னும் சில கேள்விகளுக்கு அவர் களுக்குப் பதில் தெரியவில்லை.

சிந்துவின் தந்தையை குமார் கொலை செய்தமைக்கு ஒரு காரணம் இருந்தது. தங்களுடைய உறவுக்குத் தடையாக இருந்த அவரைக் கொன்றுவிட்டால் சிந்துவை அடைந்து விடலாம் என்பதே அது. ஆனால் எதற்காக அவன் பின்னர் சிந்துவையும் தாயையும் கொன்றான் என்பது இன்னமும் எவருக்கும் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இரு வரையும் தான் கொல்லவில்லை என்றே குமார் சாதித்துவருகிறான். அப்படியானால் அவர்களைக் கொன்றது யார்? இன்னமும் அவிழாமல் அந்த மர்மம் நீண்டுகொண்டே இருக்கின்றது.


அளவுக்கு மீறிய ஆசையும் தவறான நடத்தையும் பலகுடும்பங்களை சீரழித்து வருகின்றன. சில சமயங்களில் கொலை செய்யும் அளவுக்குக் கூட அவை வீரியம் மிக்கவையாக மாறிவிடுகின்றன. வெறுமனே சினிமாவில் மட்டுமே பார்த்த இத்தகைய கொடூர நிகழ்வுகள் இப்போது எங்கள் சூழலிலும் பெருகத் தொடங்கிவிட்டமை ஒரு சமூகத் துன்பியல்தான்.

**(இது திருகோணமலையில் நடந்த உண்மைச் சம்பவம். பெயர்கள் மாற்றப் பட்டுள்ளன.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்



ஆயுதப் போராட்ட வரலாறு விடுதலைப்புலிகளின் கீழேயே பதியப்பட வேண்டும் என்பதில் பிரபாகரனும் அவருடைய போராளிகளும் அக்கறையாக இருந்தார்கள்; விடுதலைப்புலிகளின் தலைமை தமதே என்று உமா மகேஸ்வரன் விடுத்த உரிமைப் பாத்தியதையை எதிர்த்தார்கள். விடுதலைப் புலிகளும் ரெலோவும் அந்தச் சர்ந்தர்ப்பத்திலே இணைந்த ஒரு அமைப்பாக வடிவெடுத்தால், விடுதலைப்புலிகள் என்ற பெயரையும் தலைமையையும் தமதாக்கிக் கொள்ளஅது மகேஸ்வரனுக்கு வாய்ப்பாக இருந்திருக்கும். ஆகவே, மகேஸ்வரனின் பிரச்சினையைத் தீர்க்கும் வரை, தங்கள் அமைப்பைக் குலைத்து விடப் புலிகளின் மூத்த தலைவர்கள் விரும்பவில்லை. எனவே, மகேஸ்வரனுடைய உரிமைப் பாத்தியத்தையை நிர்மூலமாக்கும் வரை ஒன்றிணைந்த அமைப்பை உருவாக்குவதைத் தாமதப் படுத்த வேண்டும் என்றும் அதே சமயம் புலிகளை யும் ரெலோவையும் தனித்தனியே பலப்படுத்திக் கொண்டு இருக்க வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டது. இந்த இணைப்பை ஒத்திப் போடுவதை சிறீசபாரத்தினம் விரும்பவில்லை. ஆனாலும் அந்தத் தீர்மானத்தின் பின்னே இருந்த நியாயத்தை அவர் புரிந்து கொண்டார். இதற்குப் பின்னர் பாலாவும் பேபி சுப்பிரமணியமும் ஒரு பலமான ஊடகப்பரப்புரையைச் சென்னையிலே தொடக்கினார்கள். உமாமகேஸ்வரனின் தவறான உரிமைக் கோரிக்கையை நிராகரித்தார்கள். அதே சமயம் உலகம் பூராகவும் உள்ள விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்குக் கடிதங் கள் அனுப்பப்பட்டன. உமா பதவி இறக்கப் பட்டதன் காரணம் கடிதங்களில் விளக்கப் பட்டது. இறுதியில், விடுதலைப் புலிகளின் தலைமைக்கான கோரிக்கையை உமா மகேஸ்வரன் கை விட்டார். தனியாக போராளி இயக்கம் ஒன்றைத் தோற்றுவித்தார். தமிழீழ விடுதலைக் கழகம் (PLOTE) என்று அதற்கு பெயர் சூட்டப்பட்டது. ஆனால் இதே கால கட்டத்தில் வெவ்வெறு வளர்ச்சிகள் இடம் பெற் றன. விடுதலைப் புலிகள்- ரெலொ இணைப்புக் கைகூடவில்லை.

## புதிய அனுபவங்கள்

எமது 1981 ஆம் ஆண்டு இந்தி யப் பயணத்தின் போது தலைமை களுக்கு இடையே அரசியல் இழுபறி நாடகம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, ஏணைய போராளிகளுடன் கூடிப் பழகுவதில் நான் தடுக்கப்பட்டேன். இந்தத் தடவை, சென்னை நகரப் புறத்திலுள்ள வன சரவாக்கத்தில் வீடு ஒன்றைப் போராளிகள் வாடகைக்கு அமர்த்தி இருந்தார்கள். அரசியல் சூட்சுமங்கள் நடந்து கொண்டிருந்த போதும், அந்த வீட் டில் தோழமை[...] உணர்வே நிலவியது. எம்[...]மோடு அங்கே தரித்தி[...]ருந்தவர் கள் ஏதோ ஒரு வகை யில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவர்கள்; முக்கிய புலிப் போரா ளிகள். ஒருவர் பேபி சுப்பிர மணியம். இளங்குமரன் என்றும் அவர் அழைக்கப்பட்டார். இவர் பிரபாகரனின் ஆயுட்தோழர். இளம் போரா ளியாக இருந்த போதே இவர் வெடிமருந்திலும் நேரக்குண்டிலும் விற்பன்னர். ஆனாலும் மிகவும் சாதுவானவர். மற்றவர்களுக்கு என்றுமே கெடுதி விளைவிக்காதவர். அதிகாரப் போட்டியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாதவர். அற்பத் தன மான வதந்திகளைப் பரப்பாதவர். அவரிடம் தற்பெருமை கிடையாது. போராட்ட வரலாறோ, அதில் புலிகளின் பங்கோ அத்தனையும் அவருக்கு மனப்பாடம். அவர் ஒரு நடமாடும் அறிவுக்களஞ்சியம். உணவில் சுத்த சைவம். பச்சை மிளகாயைத் தாமே பொரித்து, ஐந்து, ஆறு ஈரவெங்காயத்தோடு சோறு சாப்பிடுவார். அது தான் அவருடைய பிரதான உணவு. அவருடைய போக்கு விசித்திரம் என்றாலும் விடுதலைப் புலிகளின் இலட்சியத்தில் உறுதியுடையவர். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். எமது நீண்ட கால நண்பர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகிய பின்னரும் நெருங்கிய நண்பராகத் தொடர்ந்து திகழ்ந்தவர். நேசன்- ரவீந்திரதாஸ். இப்போது வெளிநாடு ஒன்றில் வாழ்கிறார். பிரபாகரனுடன் போராட்டத்தில் சேர்வதற்காக மருத்துவக் கல்லூரிப் படிப்பை இடையில் முறித்துக் கொண்டு வந்தவர். முன்பு பிரபாகரனின் பெரும் நம்பிக்கைக்கு பாத்திரமாய் இருந்தவர். அவர்களுக்கு இடையே மனமுறிவு ஏற்பட்டதும் இயக்கத்தின் உள்விவகார இழுபறிகளுக்கு முகம் கொடுக்க வேறு வாழ்க்கையை அவர் நாடினார்.

அந்த நாள்களில் சங்கர் எம்மோடுதான் இருந்தார். விடுதலைப் புலிப்போராளிகளில் முதல் உயிர்ப் பலியானவர் இவரே. இவர் மரணம் அடைந்த நவம்பர் 27 ம் திகதியே மாவீரர் நாளாக வீரச்சாவைத் த்ழுவிய போராளிகளுக்கு வீரவணக்கம் செய்யும் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 1982 இலே சங்கர் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்த சிறீலங்கா அரசபடையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய, ரவை இ வ ! வயிற்றிலே பாய்ந்தது. சிகிச்சைக்காகப் போராளிகள் இவரை இந்தியா கொண்டு சென்றார்கள். உடனடியாக உரிய சிகிச்சை வழங்கப்படாததால், உள் வயிற்று நீர்ப்பை சேதமாகி, குருதியிலும் நஞ்சூறத் தொடங்கியிருந்ததால், அவர் மரணமானார். 1981 இலே அவர் எம்மோடு சென்னை யில் இருந்த நாட்க ளில், உடற் பயிற் சிக்காகஒவ்வொரு நாளும் ஓடி விட்டுத் திரும்பும் போது, ஒரு திடகாத்திரமான இளை ஞனாக



விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு **21**

அவரைப் பார்த்த எனக்கு, அந்த இளைஞனின் மரணத்தை ஏற்றுக்கொள்வது மிகக் கடினமாக இருந்தது. ஆயுதப் போராட்டம் எனும் போது அதில் இளைஞர்கள் மரணம் அடையப்போகிறார்கள் என்பது எனது மனதில் உறைத்தது.

ரகு, பல ஆண்டுகளாக பிரபாகரனின் மெய்க்காவலராகவும் நம்பிக்கைக்கு உரிய மூத்த உறுப்பினராகவும் திகழ்ந்தவர். அந்த நாட்களில் சென்னையில் பிரபாகர னின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக சங்க ரோடு இருந்தவர்களில் அவருடைய நண்பர் ரகுவும் ஒருவர். பல ஆண்டுகளுக் குப் பின், விதிகளை மீறியதால், இயக்கத் தில் இருந்த ரகு விலக்கப்பட்டார். பிரபாகரனின் பாதுகாப் புக்குப் பொறுப்பான மூன்றாவது ஆளும் ஒரே ஊரில் இருந்து வந்த அவர்களுடைய வயது நண்பரோ தான். அவரது பெயர் பண்டிதர்.

நான் சென்னைக்கு சென்றபோது எனக்குத் தமிழில் ஒரு வார்த்தையும் பேச வராது. பண்டிதருக்கு ஆங்கிலம் அறவே தெரியாது. ஆனாலும் கை சமிக்ஞை களாலும் கலகத்த சிரிப்பாலும் போதுமான அளவு புரிர்ந்துணர்வை இனிமையாக ஏற்படுத் திக் கொண்டோம். பண்டிதரின் நினைவு வரும் போதெல்லாம் தொய்வு நோயுடன் போராடும் ஒரு இளைஞரின் நினைவுதான் வரும். எந்த நாளாவது இந்தியத் தூசியோ, சமையலில் மிளகாயின் காரமோ பண்டி தருக்கு மூச்சுத் திணறலைஏற்படுத்தாமல் விட்டது கிடையாது. ஆனால் இந்த உடல் அசௌகரியம் அவரைத் தளர்வடையச் செய்ததில்லை. தமது அரசியல் பணிகளை தமது நோய் கட்டுப்படுத்த அவர் இடமளித்ததும் இல்லை. யாழ்ப் பாணத்தில் அவரை நான் போய் சந்திப் பதற்கு முன்ன தாகவே அவர் இறந்து போனார். ஆனாலும் விடுதலைப் புலிகளின் யாழ்ப் பாண மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவர் என்பதற்காக அவர் தேடப் பட்டுக் கொண்டிருந்த அந்த ஆபத்தான நாள்களில் கூட மூச்சுத் திணறும் தொய் வோடு அங்கும் இங்கும் அவர் சைக்கிளில் ஓடித் திரிவதை என்னால் நினைத்துப் பார்க்க முடிகிறது.

(பதிவுதொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடுகு சிறிது...!

அதுவொரு குட்டி நாடு. சனத்தொகை ஒன்றரைக் கோடி தான். ஆனால் உலகத்தையே அந்தநாட்டு மக்கள்தான் மறைமுகமாக ஆள்கிறார்கள். எப்படி... ??

அந்த நாட்டை பற்றியும், அந்த மக்களைப் பற்றியும் சில தகவல்கள் இதோ..... !!

*அந்த நாட்டில் ஒருவர் திருமணம் செய்யவேண்டுமென்றால் ஏதாவது ஒரு துறையில் டாக்டர்(கலாநிதி) பட்டம் வாங்கி இருக்க வேண்டும்.

*கல்லூரியில் சேர்வதற்கு ஒருவர் விண்ணப்பித்தால் அவருக்கு 5000 டொலர் வழங்கப்படும். அதனைக் கொண்டு அவர் ஏதாவது ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து 15 பேருக்கு வேலை கொடுத்த பின்பே அவருக்கு குறித்த கல்லூரியில் அனுமதி வழங்கப்படும். இதனால் இன்று உலகத்தில் உள்ள பிரபலமான நிறுவனங்களில் அரைவாசி அந்த நாட்டைச் சேர்ந்தவை தான்.

* உலக நாடுகளில் ஒளிபரப்பாகும் பெரும்பாலான சிறுவர் கார்ட்டூன் படங்களைத் தயாரிப்பது அவர்கள் தான். ஆனால் அந்த நாட்டின் குழந்தைகள் கார்ட்டூன் பார்க்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

* உலகிலேயே முதன் முதலாக வங்கிகள் மூலம் கடன் கொடுக்கல், வாங்கலை அறிமுகப்படுத்தியவர்களும் இந்த நாட்டவர்களே.

* கர்ப்பிணிப் பெண்கள் தொலைக்காட்சி , சினிமா என்பவற்றைப் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக கர்ப்பகாலத்தில் கணிதம், ஆங்கிலம் போன்றவற்றை பல மொழிகளில் படிப்பார்களாம். இதனால் கருவிலிருக்கும் போதே குழந்தைக்கு அறிவூட்டப்படும் என்பது அவர்கள் நம்பிக்கை.

* இந்த நாட்டைச் சேர்ந்த 84 பேர் நோபல் பரிசை வென்று அதிக நோபல் பரிசுகளை வாங்கிய நாடு என்ற சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

* உலகத்தில் மெத்தப் படித்த மேதாவிகளும் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரம் மிக்கவர்களும் உள்ள ஒரே நாடு.இத்தனைக்கும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரை தமக்கென ஒரு நாடற்று, நாதியற்று அலைந்தவர்களே இந்த நாட்டு மக்கள். இப்போது இவர்களை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அந்த நாடு எது? சொல்லுங்கள் பார்ப்போம்.ஆம்! இஸ்ரேல் தான் அந்தநாடு.

# அண்ணன் என்னடா...!...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகு திகுவென எரியத் தொடங்கிவிட்டது.

இந்த நிலையில் இந்தமாத ஆரம்பத்தில் அழகிரி பாங்கொக் சென்றிருந்த சமயத்தில் அழகிரியின் ஆதரவாளர்கள் சிலர் கட்சிப் பொறுப்புகளில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர். உடனேயே கொதித்துப் போன அழகிரி, தன் பாங்கொக் சுற்றுலாவை இடையிலேயே கைவிட்டு விட்டு தமிழகம் வந்தார். விமானநிலையத்தில் இறங்கிய கையோடு, தி.மு.க தலைவர் கருணாநிதியின் வீட்டுக்கு சென்றார். அப்போது கருணாநிதி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளார்.

அறைக்கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்ற அழகிரி, தூக்கத்தில் இருந்த கருணாநிதியை எழுப்பி,

"என்னுடைய ஆதரவாளர்களை நீக்கியது எந்தவகையில் நியாயம்?" என்று உலுப்பியிருக்கிறார். பதிலுக்கு கருணாநிதியும் சத்தம் போட, ஒரு கட்டத்தில் கோபத்தின் உச்சிக்கே சென்ற அழகிரி

"பொறுத்திருந்து பாருங்கள். இன்னும் 3 மாதத்தில் ஸ்ராலினைக் கொல்லாமல் விடமாட்டேன்" என்று சொல்லிவிட்டு விடுவிடென்று வந்துவிட்டார். கருணாநிதிக்கு வந்ததே கோபம். உடனேயே தி.மு.க பொதுச்செயலாளர் அன்பழகனைக் கூப்பிட்டு, அழகிரியை கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கும் அறிவித்தலை வெளியிட உத்தரவிட்டார்.

இப்போது தி.மு.கவின் தென்மண்டலப் பொறுப்பாளர் அழகிரி எதுவுமற்ற சாதாரண மனிதராகி விட்டார்.

தன்னைக் கட்சியில் இருந்தே தூக்கியெறிந்தமைக்கு பழிவாங்கும் முகமாக,

தி.மு.க வில் நடைபெற்ற ஊழல்களை அம்பலப்படுத்துவேன் என்று மிரட்டல் விடுக்க, தி.மு.க வினருக்கு சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. தங்களுடைய பொட்டுக் கேடுகள் வெளிப்பட்டுவிட்டால் நாடாளுமன்றத்தேர்தலில் ஒரு ஆசனம் கூடக் கிடைக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே அழகிரியின் வாயை அடைக்க ஒரே வழி, அவரை மீண்டும் கட்சிக்குள் உள்ளீர்ப்பதுதான்.அதனால் சமாதானப்புறாக்கள் சென்னையில் இருந்து அழகிரியின் கோட்டையான மதுரைக்கு சிறகு விரிக்கத் தொடங்கின.ஆனால் அழகிரி மசியவில்லை.

இந்த நிலையில் ஜனவரி 30 ஆம் திகதி அழகிரியின் பிறந்தநாள். அன்றைக்கு தங்கள் பலம் என்னவென்பதைக் காட்டுவது போன்று அழகிரி ஆதரவாளர்கள் மதுரையை மட்டுமல்லாது தமிழகம் முழுதையுமே சுவரொட்டிகளால் கலங்கடித்தார்கள். மதுரையில் அழகிரி பிறந்ததினத்தன்று 'அண்ணன் என்னடா, தம்பி என்னடா..,' யாரை நம்பி நான் பொறந்தேன், 'அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்! போன்ற பாடல்கள் முழங்கின. இறுதியாக பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்ட அழகிரி

'இனிமேல் நான் சமாதானமாகப் போக வேண்டுமென தி.மு.க விரும்பினால் நீக்கப்பட்ட என் ஆதரவாளர்கள் அனைவருக்கும் பழையபடி கட்சிப்பொறுப்புக்களைக் கொடுக்கவேண்டும்' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லிவிட்டார்.இதேவேளை அழகிரியின் பிறந்ததினத்துக்கு தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்களான நெப்போலியன், ரித்தீஷ், இராமலிங்கம் மற்றும் சில சட்டசபை உறுப்பினர்கள் நேரில் சென்று வாழ்த்துக்கூறியுள்ளனர்.இது அழகிரிக்கு விடுக்கப்பட்ட சமாதான சமிக்ஞை என்றே சொல்லப்படுகின்றது. எத்தனை நாளைக்கு இந்த அண்ணன் , தம்பி நாடகம் நடக்கப்போகின்றது என்று வேடிக்கை பார்க்கிறார்கள் தமிழக மக்கள்.

# வெம்மை உணர்தல்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தப்பட்டமைக்கான சாட்சியங்களாக பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் இருக்கிறார்கள். அதைவிட இத்தகைய தடைசெய்யப்பட்ட - மனுக்குலத்துக்கு விரோதமான- குண்டுகள் வெடிக்காத நிலையில் அங்கு மீட்கப்பட்டிருக்கின்றன. போர்க்காலத்தில் மனிதாபிமான உயிர் மீட்பு மையங்களாக இருந்த மருத்துவ மனைகள் மீது குண்டுமாரி பொழிந்ததற்கும் ஆதாரங்களாக சிதிலமடைந்த கட்டடங்கள் எஞ்சிக்கிடக்கின்றன.

"எனது கணவனை படையினரிடம் தான் ஒப்படைத்தேன். இன்னும் அவர் திரும்பி வரவேயில்லை" என வடமாகாண சபை உறுப்பினரே சாட்சியமளிக்கும் அளவுக்கு ஆயிரக்கணக்கானோர் காணாமல் போனோராக மாற்றப்பட்டுள்ளனர். அந்த உண் மையை எங்கு வேண்டுமானாலும் வந்து சொல்வதற்கு இரத்தமும் சதையுமாக ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். ஆனால் நிலைமை இவ்வாறிருக்க இனப்படுகொலை என்று சொல்ல வடக்கு முதல்வர் ஏன் தயுங்குகிறார்? மேலே சொல்லப் பட்டவற்றை விடவும் இனப்படுகொலைக்கு என்ன சாட்சியம் வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் அன்றைக்கு சபையில் சொன் னதை வைத்துப்பார்க்கும் போது, ஏதோ நாங்களெல்லோரும் இலங்கையில் நடைபெற்ற சாதாரண வன்முறைகளை ஊதிப் பெருப்பித்து இனப்படுகொலை என்ற மாயையை உருவாக்க முனைவதாகவே அவர் அபிப்பிராயப்படுகிறார் என்று எண்ணவேண்டியுள்ளது. "நெருப்புக்க நிண்டவனுக்குத்தான் வெக்கை எண்டா என்னெண்டு தெரியும். ஏசிக்க இருந்தவர் நெருப்பு குளிரும் எண்டு தானே சொல்லுவார்" என முதலமைச்சரின் கூற்றுத் தொடர்பாக மக்கள் தமக்கிடையே பேசிக்கொள்கிறார்கள்.

ஆனால் வடக்கு மக்களின் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்ற ஒருவரால், இங்கு நடைபெற்றது இனப்படுகொலை தான் என்பதைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், வடக்குக்கு வந்து போகும் சர்வதேசப்பிரதிநிதிகளுக்கு உண்மை நன்றாகத் தெரிந்தே இருக்கிறது. பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை போன்றோர், இனப்படுகொலை ஒன்றைத் திட்டமிட்டு சிங்களப்பேரினவாதம் அரங்கேற்றியிருப்பதாகவே சொல்லிச் சென்றிருக்கிறார்கள். இதனால் தான் இறுதிப் போர் பற்றி சுயாதீன விசாரணை அவசியம் என்று தொடர்ச்சியாக அவர்கள் வலியுறுத்தியும் வருகிறார்கள்.

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடரை சமாளிக்க இலங்கை பகீரதப் பிரயத்தனம் எடுத்துவரும் நிலையில், இனப்படுகொலைகள் தொடர்பிலான சுயாதீன விசாரணைக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டியதும் அதற்கு ஆதர வாகக் குரல் கொடுப்பதும் வடக்கு முதல்வரின் கடமை.ஆனால் அதற்கு நேர்மாறா கவே அவர் செயற்படுகிறார் என்பதே மக்களின் கணிப்பு.

எனவே இனப்படுகொலை தொடர்பில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இன்றி சுயாதீன விசாரணையின் அவசியத்தை வடக்கு மாகாண சபை சர்வதேசத் திடம் வலியுறுத்த வேண்டும் .அதை விடுத்து சட்டச்சிக்கல் அது, இது என்று பயந்தாங் கொள்ளிகளாக வடக்கு மாகாணசபை செயற்படுமானால் 1983 கலவரங்கள் தொடக்கம் இறுதியாக மீட்கப் பட்ட மன்னார் புதைகுழி வரை எல்லா வற்றையும் மண் போட்டு மூடிவிட்டு, காலாட்டி உல்லாசம் காணும் பேறு இலங்கைக்கு கிடைத்துவிடலாம். அவ்வாறு இன அழிப்பில் ஈடுபட்ட சிங்களப் பேரினவாதிகளைக் காப்பாற்றவா வடக்கு முதல்வர் இனப்படுகொலை அல்ல இனப்படு கொலை போன்றது எனச் சொல்லி வருகிறார்? 'கண்ணாடியில் பார்த்துத்தான் கைப்புண்ணைக் கண்டறியவேண்டும்' என அவர் அடம் பிடிப்பதன் மர்மம் யாருக் குமே தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உள்ள மாகாணங்கள்

1. வடக்கு மாகாணம்
2. கிழக்கு மாகாணம்
3. வடமத்திய மாகாணம்
4. வடமேல் மாகாணம்
5. மத்திய மாகாணம்
6. சப்ரகமுவ மாகாணம்
7. ஊவா மாகாணம்
8. தென் மாகாணம்
9. மேல் மாகாணம்

# இலங்கையில் அரச சேவை மாவட்டங்கள்

1) கொழும்பு
2) கம்பகா
3) கழுத்துறை
4) கண்டி
5) மாத்தளை
6) நுவரெலியா
7) காலி
8) மாத்தறை
9) அம்பாந்தோட்டை
10) யாழ்ப்பாணம்
11) மன்னார்
12) வவுனியா
13) முல்லைத்தீவு
14) கிளிநொச்சி
15) மட்டக்களப்பு
16) அம்பாறை
17) திருகோணமலை
18) குருநாகல்
19) புத்தளம்
20) அனுராதபுரம்
21) பொலன்னறுவ
22) பதுளை
23) மொனராகலை
24) இரத்தினபுரி
25) கேகாலை

# இலங்கை

## பற்றி அறிந்து கொள்வோம்



1. இலங்கையில் எத்தனை தேர்தல் மாவட்டங்கள் உள்ளன? -
2. இலங்கையின் தலைப்பட்டினம் எது? ஸ்ரீ ஜயவர்தனபுர
3. இலங்கையின் பெரிய நகரம் எது? - கொழும்பு.
4. இலங்கையின் பரப்பளவு என்ன? 65,610 கிமீ / 25,332 சதுரமைல்
5. இலங்கை எப்போது (பிரிட்டனிடம் இருந்து) சுதந்திரம் பெற்றது?. - 04.02.1948இல்.
6. இலங்கை அரசு எவ்வாறு அழைக்கப்படுகின்றது? இலங்கை சனநாயக சமத்துவ குடியரசு (Democratic Socialist Republic of Sri Lanka)
7. இலங்கையில் உயர்ந்த நீர் வீழ்ச்சி எது? - பம்பரகந்த.
8. இலங்கையில் நீளமான ஆறு எது? மகாவலி கங்கை. 335 கி. மீ
9. இலங்கையின் உயர்ந்த மலை எது? - பிதுருதலாகல மலை. (Pidurutalagala) கடல் மட்டத்திலிருந்து 2524 மீட்டர் (8200 அடி)
10. மக்கள் தொகை என்ன? 2009 மதிப்பீடு 20,238,000 - July 2008 குடிமதிப்பு 21,324,791
11. இலங்கையில் பாவனையில் உள்ள நாணயம் என்ன? இலங்கை ரூபாய் (LKR)
12. இலங்கையின் நேர வலயம்: (ஒ.ச.நே + 5.30 மணி (கிறீன்வீச் நேரத்துடன் 5.30 மணி கூட்ட வேண்டும்)
13. இலங்கையின் இணையக் குறி என்ன?: lk
14. இலங்கையின் தொலைபேசி எண் என்ன?: +94
15. இலங்கையில் பாவனையில் உள்ள மின்னழுத்தம் எது?: 230V
16. இலங்கை எங்கே அமைந்துள்ளது?: இந்து சமுத்திரத்தில் மையக்கோட்டிற்கு வடக்காக 6 பாகை 54 கலைக்கும் (6{54 - 6{ 9N), நெட்டாங்கிற்கு கிழக்காக 79{54 - 79{ 9E வும் அமைந்துள்ளது.)

*சிறுவர் மர்மத் தொடர்*




இளவரசர்கள் உயிர் பெற்றதோடு இன்னொரு ஆச்சரியமும் மணிமொழிக்குக் காத்திருந்தது. குகையில் நிறுத்தப்பட்டிருந்த ஏனைய சிலைகளும் இளவரசர்கள் போலவே உயிர்பெறத் தொடங்கின. அவ்வாறு உயிர் பெற்ற சிலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாட்டு இளவரசர்களாய்த் தோற்றமளித்தனர். அவர்கள் அனைவரும் நன்றியோடு மணிமொழியை நோக்கினர். "நீங்கள் கூட மனிதர்கள் தானா? எதற்காக இப்படிச் சிலையாக மாறினீர்கள்?" என்று அவர்களை நோக்கி மணிமொழி வினவினாள். அவளுடைய கேள்விக்கு உயிர்பெற்ற இளவரசர்களில் ஒருவன் பதில்கூற முன் வந்தான். "இளவரசியே நாங்களும் உம்மைப் போன்று அரச வம்சத்தைச் சேர்ந்த வாரிசுகள் தான். எப்போதும் இளமையோடு இருக்கும் சிரஞ்சீவி மந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மந்திரக்கிழவி ஆயிரத்தொரு அரசிளம் குமாரர்களைப் பலி கொடுக்க வேண்டும். அதற்காகவே எம்மை இங்கே அடைத்து வைத்திருந்தாள். அவளிடம் இருந்து தப்புவதற்காக உங்களைப்போல் நாங்களும் சுரங்க வழியில் இறங்கினோம். ஆனால் சிலையின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது நாங்களும் சிலைகளாகிப் போனோம். இன்று நீர் சரியான பதிலைச் சொன்னதால் நாங்களும் மீண்டும் மனிதர்களாகும் பேறு பெற்றோம்" என்று அந்த அரசிளங்குமாரன் மணிமொழிக்கு நடந்தவற்றை எடுத்துரைத்தான்.

அப்போது இவர்களிடம் கேள்வியைத் தொடுத்துச் சிலைகளாக்கிய கண்களில் ஒளிவீசும் கற்கள் கொண்ட காவல் சிலை தன் கைகளை ஒருமுறை காற்றில் அசைத்தது. அடுத்த கணமே அதன் கைகளில் ஆயிரம் சூரியன் பிரகாசத்தை ஒத்த வாள் ஒன்று தோன்றியது. அந்த வாளால் உயிர்பெற்ற அரசிளம்குமாரர்கள் அத்தனை பேரையும் அந்தக் காவல் சிலை கொல்லப் போகிறதோ என்று எண்ணி மணிமொழி கலவரம் அடைந்தாள்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*






# ஆசான்

ஆசானாக நான் இருந்தால் ..
அறிவுரைகள் கூறிடுவேன்
சின்னஞ் சிறிய பாலகருக்கு ..
நல்ல கல்வி நான் தருவேன் ...!

டாக்டராக நானிருந்தால் ..
நாடிபிடித்து பார்த்திடுவேன் ..
ஊக்கத்தோடு நோயாளிகளுக்கு ..
ஊசிமருந்து கொடுத்திடுவேன்
.....!

மனிதனாக நீயிருந்தால்...
மனிதநேயத்துடன்
வாழ்ந்திடுவாய்
மனிதர்களை மட்டுமல்ல -பிற
உயிரையும் மதித்திடுவாய் ...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்றவன்

**கிங்:** ஒருவன் புகுந்து காசக் கிருமிகளை கொல்கின்றான்அவற்றைப் பலமிழக்கச் செய்கின்றான்.

**யமன்:** (கோபமாக) யாரவன்? எனக்கெதிராகவே சதியா? இந்த மகா மகா யமனுக்கெதிராகவே புரட் சியா? இதற்கெல்லாம் காரணமானவன் யார்?

**கிங்:** யாரவோ டொக்டர் இராஜேந்திரனாம் அவன் பூபாலுவின் 'மை பிற்ன்ட்டாம்..'

**யமன்:** சித்திரை புத்திரா! அதென்ன டொக்டர்? டொக்டர் என்றால்..?

**சித்தி:** டொக்டர் என்றால் வைத்தியர் என்று அர்த்தம்

**யமன்:** அவனை உயிருடன் அவனின் பூதவுடலுடன் அவனது கண்ணைக் கட்டி இங்கு இழுத்து வாருங்கள். உம்... உடனடியாகக்



கொண்டு வந்து சேர்த்துவிடுங்கள்.

**கிங்:** உத்தரவு மகாராஜா. (இரு கிங்கிரர்களும் மறைதல்)

**யமன்:** அவன் இங்கு வரட்டும்பார்த்துக் கொள்கின்றேன். சித்திரபுத்திரா நீர் கூறியதுபோல அந்தப் பூபாலசிங்கத்தின் உயிரைக் கொண்டு வருவது கஷ்டம் போலத்தானுள்ளது.

**சித்திர:** தாங்கள் மனசு வைத்தால் நடக்காதது ஒன்றுளதா?.... ஹிஹி. (பிரடியைச் சொறிதல்)

**யமன்:** எத்தனை தடவை சொல்வது பிரடியைச் சொறியாதீர் என்று..

**சித்திர:** ம்... மன்னிக்கவும். அடிக்கடி பூலோகக் கணக்குகளைச் சரிபார்க்க பூலோகம் சென்று வந்ததால் ஏற்பட்ட பழக்கம்.. பழக்கதோஷம்.. 'சொறி' இனிச் சொறி யேன்.. (என்று தலையைச் சொறிய, கிங்கிரர்கள் ராஜேந்திரனைக் கண்ணைக் கட்டி அழைத்து வந்து நிறுத்துதல்)

**யமன்:** அவனின் கண் கட்டுக்களை அவிழ்த்து விடுங்கள்.

**ராஜேந்:** நான் எங்கே நிற்கின்றேன்? புது உலகமாக இருக்கின்றதே? கரிய உருவம்கையிலே சூலம்சூலத்திலே பாசக் கயிறு..ஓ..மிஸ்டர் ஜேமன்.

**சித்திர:** நோ..நோ..நொட் ஜேமன். மிஸ்டர் ஜமன். யமதருமராசன். உம்மை எதற்காக இங்கு அழைத்து வந்துள்ளோம் தெரியுமா?

**ராஜேந்:** அழைத்து வரவில்லை. இழுத்து வந்துள் வீர்கள். எதற்காக என்னை இழுத்து வந்தீர்கள்?

**யமன்:** உம்மீது பல குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கவே கொண்டு வந்தோம்.

**ராஜேந் :** சரி..அழைத்து வந்தீர்கள்..நம் நாட்டிலென்றால், வந்தவர்களைக் கதிரை போட்டு இருத்தி ஆற அமரக் கதைப்போம்.. அதுதான் நம்நாட்டு வழக்கம்.

**யமன்:** ம்..நக்கலா அடிக்கிறீர்? பல்லைஉடைப்பேன்.

**ராஜேந்:** நீர்தான் எங்கள் சிவபெருமானிடம் உதைபட்டு பல்லு உடைபட்டனீர். அந்த மார்க்கண்டேயன் விடயத்தில்.

**யமன்:** ம்... நீர் பேசத் தெரிந்தவன்..

**ராஜேந்:** ..(தனக்குள்) ம். ஓ... இந்த வசனத்தை எங்கோ கேட்டது போலிருக்கின்றதே? (வெளியாக) ஓ... நீர் எங்கோ கட்டப்பொம்மனைப் பார்த்திருக்கின்றீர் போலுள்ளது.

**யமன்:** கட்டப்பொம்மனைப் படத்தில் பார்க்க வேண்டிய தேவை எனக்கில்லை. கட்ட பொம் மனின் கழுத்துக்கும், புளிய மரத்திற்குமிடையில் தொங்கியது இதோ, இந்த எனது பாசக் கயிறுதான்.

**சித்தி:** தம்பி..பூலோகத் தம்பி கோபிக்கக் கூடாது. பூலோகத்திலே, பூபாலசிங்கம் என்பவரின் உயிர் இன்னும் இரண்டு மாதங்களில், இவ்விடம் வந்து சேரவேண்டியுள்ளது. அவரின் உயிரைக் கவர இந்த இரண்டு கிங்கிரர்களையும் காசக் கிருமிகளு டன், பூலோகம் அனுப்பினோம். பூபாலு மீது காசக் கிருமிகளை ஏவி அவனை மரணத்துள் தள்ள நினைத் தோம். அந்தக்கிருமிகள் அவனை நெருங்கவிடாது நீர் தடுத்துள்ளீர். இதுதான் உம்மீதுள்ள குற்றச் சாட்டு.

**யமன்:** ஆமாம். அவர்களைப் பணிசெய்ய விடாது தடுத்தது குற்றம்தானே? ஒத்துக் கொள்கின்றீரா?

**ராஜேந்:** இல்லை. நான் உங்கள் கடமையைத் தடுக்கவில்லை. என் கடமையைத்தான் செய்தேன். அவன் என் ''கிளாஸ் மேற்''அவனைக் காக்க வேண்டியது என் கடன்.

**யமன்:** சித்திரபுத்திரா! அது என்ன "கிளாஸ் மேற்'

**சித்திரபுத்திரன்:** (அவசர அவசரமாக ஏட்டி னைப் புரட்டிப் பார்த்துவிட்டு) ஆ...இங்கை இருக்குது "டிக்ஸனரி.." கிளாஸ் என்றால் கண்ணாடிமேட் என்றால் செய்யப்பட்டது. ஓ..கே. "கிளாஸ் மேட்" என்றால் கண்ணாடியால் செய்யப்பட்டது என்று அர்த்தம்.

**ராஜேந்:** "கிளாஸ் மேற்" என்றால் வகுப்பு சகபாடி அவனைக் காக்க வேண்டியது என் பொறுப் பு.

**யமன்:** நான் யமன். காலா காலத்தில் அவர் களின் உயிரைக் கவர வேண்டியது என் கடன்.

**ராஜேந்:** நான் டொக்டர். காலா காலத்தில்




அவர்களை நோயிலிருந்து காக்க வேண்டியுது என் கடன்.

**யமன்:** எதிர்த்தா பேசுகிறீர்?

**ராஜேந்:** உண்மையைப் பேச அஞ்ச வேண்டியதில்லையே!

**யமன்:** உன்னால் சாவிலிருந்து அவனைக் காப் பாற்ற முடியுமா?

**ராஜேந்:** சாவிலிருந்து காக்க முடியாது..ஆனால் காச நோயிலிருந்து காக்க முடியும்.

**யமன்:** சவாலா விடுகின்றீர்? உங்கள் அயல் நாடாம் இந்தியாவில், நிமிடத்திற்கொருவர் (கை விரல் களைச் சொடுக்கியவாறு) நிமிடத்திற்கொருவர் காச நோயால் மடிவதனை நீர் அறிவீரா? ஏன் உம்முடைய நாட்டிலும் கடந்த வருடம் பலர் காச நோயால் மடிந்ததை நீர் அறிவீரா?

**ராஜேந்:** உலகமெலாம் பல கோடி மக்கள் பி.சி.ஜி. ஆல் காச நோய் நெருங்க விடாது தடுக்கப்படுவதனை நீர் அறிவீரா?

**யமன்:** சித்திர புத்திரா! அது என்ன பிசிஜி.?

**சித்திர:** பிசிஜி என்றால் என்ன குருவே இது தெரியாதா?.... பிசிஜி என்றால் பிசிஜி தான். அதாவது பிஸிஜி என்றால்... என்றால்..

**ராஜேந்:** "பசிலசு" எனும் காசக் கிருமியை செயலிழக்கச் செய்து, சுக தேகியின் உடலுள் புகுத்துவர். இதனால் அந்த உடல் எதிர்ப்புச் சக்தியைப் பெறுகின்றது. கல்மேற், கியுரின் என்கின்ற இரண்டு விஞ்ஞானிகள் இதனைக் கண்டு பிடித்தனர். இந்தத் தடை மருந்து தான், பிசிஜி எனப்படுகின்றது

**சித்திர:** அப்ப பிசிஜி எனப்படுவது காச நோய் வராது தடைசெய்யும் ஒரு தடுப்பு முன்

> கிறிஸ்துவுக்கு முன் ஐயாயிரம் ஆண்டிலேயே காச நோய் இருந்திச்சுது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், காச நோய் மரணம் உலகம் முழுவதும்வருடாந்தம் ஐம்பது மில்லியன். தெரியுமா?

னேற்பாடு என்று சொல்லும்.

**ராஜேந்:** ஆம்... பிள்ளைகள் பிறந்தவுடன் இந்தப் பாதுகாப்பு மருந்து செலுத்தப்பட்டு அவர்கள் பாது காக்கப்படுகின்றனர்.

**சித்திரபுத்:** கிறிஸ்துவுக்கு முன் ஐயாயிரம் ஆண்டிலேயே காச நோய் இருந்திச்சுது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், காச நோய் மரணம் உலகம் முழுவதும் வருடாந்தம் ஐம்பது மில்லியன். தெரியுமா?

**யமன்:** உங்கள் நாட்டில் வருடா வருடம் ஒன்பதினாயிரம் பேர் காசநோய்க்குள்ளாக்கப் படுவதனை நீரறிவீரா? 2012 இல் மொத்த காச நோயாளிகள் 9343 பேர். இவர்களில் புதியவர்கள் 8507 பேர்..எப்படி?.......

**ராஜேந்:** காச நோயைத் தடை செய்ய நாம் முன்பு "சிஎன்ரபிரி" யும் தற்போது அதுவே "என்பிரிசிசிடி" எனவும் செயற்பட்டு மக்கள் சேவையாற்றி வருவதனை நீங்கள் அறிவீர்களா?

**யமன்:** சித்திரபுத்திரா! அது என்ன "என்பிரிசிசிடி"?

**ராஜேந்:** ஓ... அதுவா? "என்பிரிசிசிடி" என்றால், காசநோய் தடுப்பும், மார்பு நோய்களுக் குமான தேசிய செயற்றிட்டம்.

**யமன்:** அறியாமையைப் பரப்பி அறிவு பெறாது தடை செய்யும் நம்மவர் வென்றிடுவர்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோதக் காதல்

**காதல் என்பது தனியே மனிதர்களுக்கு மட்டும் தான் வருமா? இல்லையில்லை. அது எங்களுக்கும் வரும். அதுவும் இன பேதமின்றிக் காதலிப்போம் என்று நிரூபித்திருக்கின்றன இந்தோனேசியாவைச் சேர்ந்த ஒரு குரங்கும் கோழியும்.**

**இந்தோனேசியாவின் ஜாவாத் தீவை சேர்ந்த ஹக்கிம் என்பவர் குரங்கு ஒன்றை வளர்த்துள்ளார். அவர் தினமும் சந்தைக்குப் போகும் போதெல்லாம் தன்னுடைய குரங்கையையும் அழைத்துச் செல்வாராம். அங்குள்ள சந்தைக்கு தினமும் தனது குரங்கை அழைத்து சென்றுள்ளார். அதன்போது ஒருநாள் அங்கு நின்ற கோழியொன்று குரங்கைக் கண்டு காதலில் விழுந்திருக்கிறது. அவ்வளவுதான். குரங்குக்குப் பின்னாலேயே அதுவும் வந்துவிட்டது. குரங்குக்கும் கோழியைப் பிடித்துப்போக இப்போது இவை இரண்டும் காதல்தேசத்தில் இணைந்து சந்தோசப்படுவதாக ஹக்கிம் சொல்கிறார். இரண்டும் கட்டியணைத்து தம் அன்பை வெளிப்படுத்துவதை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். (முகப்புப் படத் தகவல்)**



இளையோருக்கான புதிய பகுதி!

சுபிதி

## காதலர் மட்டும்...

# காதலா? காமமா?

**கொற்றவை**

**கா**தலும் (ஈர்ப்பு), காமமும் உயிரியற்கை. ஆனால் பண்டைய காலம் தொட்டு பல்வேறு வகையான கருத்தியல்கள் இவ்விரண்டைச் சுற்றியும் ஏற்றிவைக்கப்பட்டிருக்கின்றன. காதல் என்பதற்கான விளக்கத்திலிருந்து உடல் உறவுக்கான விளக்கப்படங்கள் வரை இறையியலுக்கு நிகராக ஒரு மாயை கலந்த மிகையுணர்ச்சியுடன் கையாளப்படுகிறது.

காதல் என்ற பதம் ஒரு குறிப்பிட்ட வகையான ஈர்ப்பு உணர்ச்சி.

உடலின் உணர்ச்சியை உயர்த்திப் பிடிக்கவும், நியாயப்படுத்தவும் கொடுக்கப்பட்ட ஒரு சொல்லே காதல். ஆண் -பெண் அல்லது ஒரே பாலினத்தவர் இப்படி யாராக இருந்தாலும் ஒருவருக்கு மற்றொருவர் மீது ஓர் விருப்பம், ஈர்ப்பு என்பது பல்வேறு காரணங்களால் தோன்றுகிறது. குறிப்பாக, பதின்மப் பருவ வயதில் இது தொடங்கி விடுகிறது. குழந்தைப் பருவத்தில் ஆண், பெண் நட்பு கண்காணிக்கப்படுவதில்லை. எல்லாவகையான தொடுதல் சுதந்திரத்தோடும் அந்த உறவு சாத்தியப்படுகிறது.

குழந்தைப் பருவத்தில் தொடுதல், கட்டி அணைத்தல், முத்தம் கொடுத்தல் என்பவற்றை, அன்பின் வெளிப்பாடாகவே பெற்றோரும், இந்தச்சமூகமும் கருதுகிறது. பெண் பருவம் எய்திய பின்னர் சில விதிமுறைகள் அவளுக்கு விதிக்கப்படுகிறது. பெண்ணுடல் சார்ந்த தன்மையிலிருந்து இந்தவிதி எழுகிறது. விளைவுகளைக் கருதி வைக்கப்படும் இந்தவிதி, உடல் சார்ந்த கல்வியோ, அறிவுரைகளோ வழங்கப்படாமல் புனிதம், அகத் தூய்மை, கற்பு எனும் கருத்தாக்கங்களாலேயே முன்வைக்கப்படுகிறது.

காதலை ஒரு புனைவாக இலக்கியங்கள் தொடங்கி திரைப்படங்கள் வரை பயன்படுத்துகின்றன. பருவ மாற்ற உணர்வுகளை, எதிர்பால் ஈர்ப்பை சுவாரசியமான, வியாபாரப் பொருளாக இவை கையாண்டு வருகின்றன.

**ஒரு சர்ச்சைத் தொடர்**

உடலின் வெளிப்பாடான இருவகை உணர்ச்சியில் ஒன்றான ஈர்ப்பு. 'காதல்' என்று புனிதப்படுத்தப்பட்டும், செயல்முறை என்பது முறையற்ற 'காமம்' என்றும் இழிவுபடுத்தப்பட்டும் கையாளப்படுகின்றன. உண்மையில் இந்த இரண்டும் வேறு வேறா? காமம், காதல் என்பன வெவ்வேறு புள்ளிகளூடாகப் பயணிப்பவையா? அல்லது காதலும் காமமும் ஒன்றையொன்று விலகிக் கொள்ளாத இரட்டைப் பிறவிகளா?

**(தேடல் அடுத்த வாரமும்..)**

## சொற்சிலம்பம் போட்டி இல. 606

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | ■ | 15 | 16 | | ■ | |
| 17 | | 18 | | | ■ | 19 | |
| 20 | | | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

மேலிருந்து கீழ்

1. விருந்தின் இறுதியில் பரிமாறப்படுவது.
2. விதம்.
3. கணவன்- மனைவி .
4. ஒரேயளவான.
5. தலையில் பாத்திரமொன்றைத் தாங்கி ஆடுவது.
6. புசி.
8. குத்துவது இப்படி.
10. வரும்படி.
12. தாங்கள்.
13. மகன்/ மைந்தன் .
14. விண்ணப்பிக்கும் தாள்.
16. தமது.
17. உடல் களைப்பால் வருவது.
18. வழமையாய் வருவது.
19. அசைய.
21. ஆறாவது ஒருமை உறுப்பு

இடமிருந்து வலம்

1. இந்தியா.
4. சேறு.
7. வேள்வி.
8. முருகன்.
9. நிகழ்ந்த விடயம்.
11. செல்வம்.
12. கயிறு.
15. திங்கள்.
17. ஆழ்மனது.
19. ஆறு.
20. முகத்தில் மழிப்பது.
21. எழுத்துக்களின் ஆரம்பம்.
22. பூட்டான் தலைநகரம்.
23. மகாபாரதத்தில் ஒரு பாத்திரம்.

அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

## சொற்சிலம்பம் போட்டி இல. 606

சொற்சிலம்பம் போட்டி 604 ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி26ஆம் மற்றும் மார்ச் 05ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 604 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சிவப்பு , 2.கிளி,3.சைவம், 4.முத்தம், 5.காதம், 6.மைல், 9. குமரன், 10.சன்னி, 12.தமது, 14.குடும்பம், 16.தலைப்பு,17.நட, 18. எருது, 19.கடுகு,20.சாம்,

**இடமிருந்து வலம்**

1.சிகிச்சை, 4.முகாமை, 7.வளி, 8.வகுத்தல், 10.சம்மதம், 11.புதுன், 13. ரம், 15.மனிதன், 17.நடு, 18.எது, 19.கடம், 20.சாப்பாடு, 21.துரும்பு.22.குலம்,

### போட்டி இல. 603இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** ஜே.லொயிட்ஷன், இல; 20, ஹேன்முல்லை, கொச்சிக்கடை..

**2ஆம் பரிசு** கோ . பிறேமாவதி, 'பாக்கியம் மருந்தகம்', பிரதான வீதி, ஊர்காவற்றுறை.

**3ஆம் பரிசு** திருமதி. ரீ. செல்வதுரை, இல- 11-5/1, சென். லோறன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

### பாராட்டுப் பெறுவோர்

(1) பொ.பாலசுப்பிரமணியம், பிரதான வீதி, தம்பிலுவில்-01.
(2) க. தில்லையம்பலம், 'விஜயவாசா', வதிரி, கரவெட்டி.
(3) சீ.குகராஜா, இல-36/35, கண்டிவீதி, கமேதகம, திருகோணமலை.
(4) வே.பத்மஜோதி, 265/2A, ஆனந்தன் வீதி, மட்டக்களப்பு.
(5) ஏ. ஆர்.பாக்கியராஜா, இல-88/1, பசல்ஸ் ஒழுங்கை, கொழும்பு-06.
(6) எஸ்.பாலசுப்பிரமணியம், 176/37, லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை.
(7) மு.ஹரிதாசன், 1ம் வட்டாரம், முள்ளியவளை.
(8) கனகசபை நாகேந்திரன், இல-11-3/1, நெல்சன் இடம்,வெள்ளவத்தை, கொழும்பு-06.
(9) ச.நவரத்தினம், இல-7 1/19, காலி வீதி, வெள்ளவத்தை.
(10) அ.கலிஸ்ரா, இல-15, நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிப்போரில் நடுங்கும் தேசம்

நீலன்



ஐரோப்பாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான அரசியல் பனிப்போர் என்ற கயிறிழுப்பில் - கடந்த இரண்டு மாதங்களாக நீடிக்கின்ற போராட்டங்களால் - சிக்கித் தவிக்கின்றது உக்ரேன் தேசம்.

ஊடகங்கள் வாயிலாக அங்கு இடம்பெறும் வீதிப் போராட்டங்கள் பற்றிய படங்களையும், காணொளிகளையும் காண்கின்றோம். உக்ரேன் அதிபர் விக்டர் யனுக் கோவிச்சுக்கு எதிரானதாகவே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதாக எங்களுக்குச் சொல்லப்படுகின்றது. மேற்குலக ஊடகங்கள் என்ற சாளரத்தில் அந்தநாடுகளின் நலன் பேணுதல் என்ற சாயமூட்டப்பட்ட கண்ணாடி பொருத்தப் பட்டுள்ளதாலேயே இந்த நிலைமை. இந்த ஊடகங்கள் மேற்குலகுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான கயிறிழுப்பின் ஆழத்தில் மறைந்துள்ள பிரச்சினையின் அரசியல் மற்றும் பூகோளவியல் பரிமாணங் களைச் சரியாக வெளிப்படுத்துவதில் வெற்றி பெறத் தவறியுள்ளன.

**ஏன் இந்தப் போராட்டம்?**

மேலோட்டமாக ஆராயும் போது உக்ரேனில் நடைபெறுவது ஆட்சி மாற்றத்தைக் கோரி நிற்கும் எழுச்சிப் போராட்டம் தான் என்ற தோற்றப்பாடே தெரியும். ஆனால் இன்னமும் சற்று ஆழமாகச் சென்று ஆராய்ந்தால் ஐரோப்பிய ஒன்றியம் என்ற கட்டமைப்புக்குள் இணைந்து கொள்ள ஆசைப்படும் உக்ரேனிய மக்களுக்கும் அதை எதிர்க்கும் சக்திகளுக்கும் இடையிலான போராட்டமே இது என்பதையும் உணரமுடியும்.

உக்ரேன் அதனுடைய மேற்குப் புறத்தில் ஐரோப்பியத்தில் அங்கம் வகிக்கும் போலாந்து, லித்துவேனியா, ரூமேனியா, மோல்டோவா, பெலரூன் முதலான நாடுகளையும், கிழக்குப் பக்கத்தில் ரஷ்யாவையும் கொண்டதாக அமைந்திருக்கிறது.

ஐரோப்பாவைக் கிழக்கு நோக்கி விஸ்தரிக்கும் பிரயத்தனத்தில் கிழக்குப் பிராந்தியத்தின் சில நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன. உக்ரேனையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக மாற்றிவிட்டால் ரஷ்யாவின் காலடியை அடைந்து விட முடியும் என்பது மேற்குலகத் தலைவர்களின் எண்ணம்.

ஆனால், ரஷ்யா அதற்கு மாறாக ஆண்டாண்டு காலமாக உக்ரேனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு அந்தநாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது. உக்ரேன் மீதான தனது செல்வாக்கு ஒருபோதும் கைநழுவிப் போய்விடக் கூடாது என்பது ரஷ்யாவின் எண்ணம்.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்று ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவம் பெற்றுள்ள பல நாடுகளைப் போல், உக்ரேனும் கைநழுவிச் செல்வதை ரஷ்யா விரும்பவே விரும்பாது.

உக்ரேனைப் பொறுத்தமட்டில் அங்கு உக்ரேனியப் பிரஜைகளும் ரஷ்ய வம்சாவளியைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்றனர். கிழக்கில் ரஷ்ய வம்சாவளிப் பிரஜைகளின் செறிவு அதிகமாகவும், மேற்கில் ஐரோப்பிய கலாசாரத்தின் தாக்கங்களுக்கு உட்பட்டவர்கள் அதிகமாகவும் உள்ளனர். இதனால் மேற்கில் உள்ளவர்கள் உக்ரேன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதையும், கிழக்கில் உள்ளவர்கள் ரஷ்யாவுடனான உறவுகள் வலுப்படுவதையும் விரும்புகிறார்கள்.

**விரிவடையும் ஐரோப்பிய ஒன்றியம்**

உக்ரேனின் கீவ் நகரின் பிரதான சதுக்கம் தற்போது வன்முறைகளின் களமாக மாறியிருக்கிறது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்துடனான உக்ரேனிய உறவுகளைத் தீர்மானிக்கின்ற உடன்படிக்கை தான் பிரச்சினையின் மூலகாரணமென மேற்குலக ஊடகங்கள் கூறுகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்திலே உக்ரேனை இணைத்துக் கொள்வது பற்றி நீண்டகாலமாக பேச்சுவார்த்தை நடந்தது. அந்தப் பேச்சுவார்த்தைகளை மதிக்காமல், உக்ரேனிய ஜனாதிபதி விக்டர் யனுக்கோவிச் இருதரப்பு உடன்படிக்கையை ஏற்படுத்தும் தீர்மானத்தை நிராகரித்ததாகவும் அதன் நிமித்தம் ஆத்திரமடைந்த உக்ரேனிய மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் இந்த ஊடகங்கள் சொல்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தை பல்திசை நோக்கி விரிவாக்குவதும், முட்டுக்கட்டைகள் எழும் பட்சத்தில் அவற்றை எந்தவிதத்திலாவது முறியடித்து விடுவதுமே மேற்குலகின் நோக்கம். இதற்காக மேற்குலகம் கடைப்பிடிக்கும் பல தந்திரோபாயங்கள் இருக்கின்றன. ஒரு தேசம் முட்டுக்கட்டையாக இருக்கும் பட்சத்தில் அந்தத் தேசத்தை பிரித்தாளுவது முதலாவது இராஜதந்திரம். இது சாத்தியப்படாத பட்சத்தில், ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சியைத் தூண்டிவிடுவது இரண்டாவது யுக்தியாக இருக்கும்.

**அதிகார நிறுவனங்களின் கைவரிசை**

சேர்பியாவில் ஸ்லோபடான் மிலோசவிச் என்ற ஆட்சியாளருக்கு எதிராகக் களமிறங்கிய கிளர்ச்சியாளர்களுக்கு மேற்குலக சக்திகள் உதவி செய்தன. இதே போக்கு ஜோர்ஜியாவின் ரோஸ் புரட்சியின் போதும் தொடர்ந்தது. இன்று உக்ரேனில் விக்டர் யனுக் கோவிச்சுக்கு எதிராகத் களமிறங்கியுள்ள அரசியல் குழுக்கள் இத்தனை உத்வேகத்துடன் போராடி வருவதற்கு மேற்குலகம் வழங்கும் உதவியும் ஊக்கமும் தான் பிரதான காரணம்.

சேர்பியா, ஜோர்ஜியா ஆகிய நாடுகளில் அரசுகளுக்கு எதிரான அரசியல் இயக்கங்களுக்கு உதவி செய்த அதே நிறுவனங்கள் தான் உக்ரேனிய எதிரணிக்கு உதவி செய்து வருவதாகப் புலனாய்வு அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

இதில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொறுப்பில் இயங்கும் யு.எஸ். எய்ட் முதலான நிறுவனங்களும் உள்ளடங்கும்.

2004ஆம் ஆண்டு விக்டர் யனுக்கோவிச், விக்டர் யுஷ்சென்கோ ஆகியோருக்கு இடையிலான அதிகாரப் போராட்டம் உச்சத்தைத் தொட்டிருந்த சமயத்தில் இருந்து இத்தகைய வெளிநாட்டுச் சக்திகள் உக்ரேனிய தேசத்தில் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருந்தன.

ரஷ்யா சார்பாகச் செயற்படும் ஆட்சியாளரை ஆட்சிப் பீடத்தில் இருந்து அப்புறப்படுத்தி தமக்குச் சார்பான ஒருவரை நியமிக்கும் வரையில் இத்தகைய நிறுவனங்கள் ஓயப் போவதில்லை.

இந்த நிறுவனங்கள் சரியான வழியில் தமது இலக்கை அடைய முடியாத பட்சத்தில் எவ்வளவு மோசமான வழியையாவது கடைப் பிடித்து தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் முனைகின்றன.

இன்று உக்ரேனிய நெருக்கடியில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர விரும்பும் அரசியல் கட்சிகளை ஆட்சியாளருக்கு எதிராகத் திருப்பிவிட்டுள்ள மேற்குலக சக்திகள் அத்துடன் நின்று விடவில்லை. அவை உக்ரேனிய தேசியவாத சிந்தனைக்குத் தூபமிட்டு தீவிர வலதுசாரிகளை வளர்த்து வருவதாக மாற்று ஊடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆரம்பத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டுமென உக்ரேனிய ஜனாதிபதியை வலியுறுத்துவதற்காக ஆரம்பித்த மக்கள் இயக்கம் இன்று தேசியவாத சிந்தனைக்குள் ஈர்க்கப்பட்டு விட்டதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மார்க் ஆமண்ட் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

**ஓடப்போகிறதா குருதியாறு?**

உக்ரேனிய தேசியவாதம் என்பதும் சற்று சிக்கலான விடயமாகும். இன்று உக்ரேனிய தேசத்தில் உக்ரேனியர்கள் பெரும்பான்மை இனத்தவர்களாக வாழ்கின்றார்கள். ரஷ்யர்கள் சிறுபான்மை இனத்தவர்கள். உக்ரேனிய தேசியவாதம் தீவிரமடையும் பட்சத்தில் பெரும்பான்மையினருக்கும், சிறுபான்மையினருக்கும் இடையில் பிரச்சினை ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. இத்தகைய முரண்பாடுகள் உக்ரேனிய தேசத்தைச் சின்னாபின்னமாக்கி விடும். இதன் காரணமாக உக்ரேனில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதையும் தடுக்க முடியாமல் போகலாம்.

மேற்குலக அரசுகள் உக்ரேனிய எதிர்க்கட்சிகளுக்கு உதவுகின்ற நோக்கம் விக்டர் யனுக் கோவிச்சை ஆட்சிப்பீடத்தில் இருந்து அகற்றுவதுதான் என்றால், அதனை ஓரளவு சகித்துக் கொள்ள முடியும். ஆனால் உக்ரேனை அராஜக தேசமாக் மாற்றுவது தான் மேற்குலகின் நோக்கம் என்றால் அதனை எந்தவகையிலும் எவராலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேஸ்புக் காதல்





# அமெரிக்காவில் ஆடம்பரம்; இந்தியாவில் எளிமை !

அமெரிக்காவில் மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வந்த பெண் ஒருவர், பேஸ்புக்கின் மூலம் இளைஞர் ஒருவரைக் காதலித்து கரம் பிடித்து இந்தியாவில் எளிமையாக வாழ்ந்துவருகின்றார்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வசித்தவர் அட்ரியானா பெரால் (வயது 41). இவர் பேஸ் புக் மூலம் இந்தியாவைச் சேர்ந்த முகேஷ் என்பவருடன் நட்பாக பழகிவந்தார். பின் இருவரும் தொலைபேசியில் அடிக்கடி பேசிக் கொள்ளவே, நட்பு காதலாக மாறியது, உடனே அட்ரியானாவை தொடர்பு கொண்ட முகேஷ் தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

தமது திருமணம் குறித்து அட்ரியானா கூறுகையில், முகேஷ் தனது காதலை தொலைபேசியில் வெளிப்படுத்தியபோது என்னால் ஒன்றும் கூறமுடிவில்லை, எனக்கு சிரிப்புதான் வந்தது.

நாங்கள் சிலவற்றை பேசினோம், நான் முகேஷை தீவிரமாக உணர்ந்தேன். நீ என்னுடைய இதயத்தை வென்றால் திருமணம் குறித்து பரிசீலனை செய்கிறேன் என்று கூறினேன். அதன்பின் நாங்கள் இரண்டு மூன்று வாரங்களாக பேசினோம். எனது 25 வயது மகள் என்னுடைய நடவடிக்கையை தொடர்ந்து கவனித்து வந்தார், என்னுடைய நிறைய நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் இந்தியாவில் என்னுடைய பாதுகாப்பு குறித்து மிகவும் பயப்பட்டனர்.

ஆனால் நான் மிகவும் தெளிவாக முடிவு எடுத்தேன், முகேசை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என ஆசைப்பட்டேன் என தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் கடந்த வருடம் நவம்பர் மாதம் முறைப்படி திருமணம் நடைபெற்றது. இப்போது இந்தியாவில் வாழ்ந்துவரும் அட்ரியானா தனது நடை உடை பாவனையை இந்தியப்பெண்களைப் போல மாற்றிக்கொண்டுள்ளார்.

# சூரிய சக்தியில் நீர் சுத்திகரிப்பு

சூரிய சக்தியில் இயங்கக்கூடிய நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தினை உருவாக்கியுள்ளார் அமெரிக்காவின் நியூயோர்க்கை சேர்ந்த 14 வயது மாணவி ஒருவர்.

எந்தவொரு அசுத்த நீரையும் குடி[illegible]க மாற்றும் இந்தப் பொறிமுறையைக் கண்டுபிடித்த தீபிகா குரூப் என்ற இந்த மாணவிக்கு "அமெரிக்காவின் முதற்தர இளம் விஞ்ஞானி" பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த மாணவிக்கு அமெரிக்காவின் Discovery Education மற்றும் 3M ஆ[illegible]ய நிறுவனங்கள் 25,000 அமெரிக்க டொலர்களை வழ[illegible]ங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உயிரைக் குடித்த கைபேசி

இளைஞர்களின் அடையாளப் பொருளாக மாறிப்போய்விட்ட ஸ்மார்ட் கைபேசியால் ஒரு உயிர் பறிபோயிருக்கிறது. ஜனவரி 27 ஆம் திகதி மும்பையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் தொலைபேசியை மின்னேற்றம் செய்ய பொருத்திவிட்டு குளிப்பதற்காகச்சென்றுள்ளார். அந்தச் சமயத்தில் அவருக்கு ஓர் அழைப்பு வந்துள்ளது.

அதிர்வுநிலையில் தொலைபேசி இருந்தபோது அதை இளைஞர் எடுத்து காதில் வைத்துள்ளார். அவ்வளவுதான் அடுத்த கணமே அதனூடாக மின்சாரம் இளைஞனின் உடலில் பாய்ந்தது. ஆபத்தான நிலையில் இந்த இளைஞன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவன் உயிரைக்காப்பாற்முடியவில்லை.

கைபேசிகளை மின்னேற்றம் செய்துகொண்டிருக் கும்போது பயன்படுத்தவேண்டாம் என்ற எச்சரிக்கையை மீறியதாலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அத்துடன் அதிர்வு நிலையில் தொலைபேசி இருந்ததால் மின்சாரம் வீரியத்தோடு தாக்கியுள்ளதாக வைத்தியர்கள் கூறியுள்ளார்.



# மணமகளின் நிபந்தனை

300 கிலோ கிராம் விசித்திரமான மீன் இனத்தை மணமகன் பிடித்து வந்தால் மட்டுமே திருமணம் செய்துகொள்வேன் என்று நிபந்தனை விதித்துள்ளார் மணப்பெண் ஒருவர்.

சவுதி அரேபியாவின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள கத்தீவ் மாகாணத்தைச் சேர்ந்த இப்பெண், திருமணத்திற்காக 'மஹராக' (இஸ்லாமிய முறைப்படி மணமகளுக்கு மணமகனால் வழங்கப்படும் கொடை) இம்மீன்களை கேட்டிருக்கிறார்.

இதுமட்டுமின்றி இம்மீன்களை மணமகன் சுயமாக பிடிக்க வேண்டும் எனவும் அப்பெண் நிபந்தனை விதித்தாராம். இந்த நிபந்தனையை நிறைவேற்றுவது சாத்தியமில்லாதது எனக் கருதிய மணமகன் திரும்பிச் சென்றுவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.



# பொழுதுபோக்கு ; ஆனால் ஆபத்து !

ஐரோப்பாவில் உள்ள நீண்ட மலைத் தொடரான, ஆல்ப்ஸ் மலைத் தொடர், உலகின் முக்கியமான சுற்றுலா தலமாக விளங்குகிறது. இந்த மலைத் தொடரில், இத்தாலி - பிரான்ஸ் நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள, 1,200 அடி உயரமுடைய 'மவுன்ட் பிளாங்' என்ற மலைச் சிகரம் தான், மிக உயரமானது.

இந்த, இரண்டு மலைகளுக்கு இடையே, சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, ரோப் கார் இயங்குகிறது. இதில், இரண்டு ரோப்கார்களுக்கு நடுவில், மெல்லிய கம்பியை கட்டி, அந்த கம்பியில், 196 அடி தூரம் நடந்து, சாகசம் செய்துள்ளார், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த, ஜூலியன் மில்லட் என்பவர்.

இது பற்றி கூறும்போது, உயரமான இடங்களில், கம்பியில் நடப்பதுதான், என் பொழுது போக்கு. இதற்கு முன், பல அடி உயரமுள்ள இடங்களில் நடந்துள்ளேன். ஆனாலும், ஆல்ப்ஸ் மலை அனுபவம், வித்தியாசமாக இருந்தது... என்கிறார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 அடி சிவனின் சிலை



யாழ்ப்பாணம் மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் சிவதொண்டர் அமைப்பால் 21 அடி உயரமான சிவபெருமானின் தியானரூபச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையின் திருக்குடமுழுக்கு கடந்த 22 ஆம் திகதி நடைபெற்றது. முதல் முறையாக செந்தமிழ் திருமறை ஓதி இந்தக் குடமுழுக்கு நடந்தேறியுள்ளது. இதுநாள் வரையில் இந்து ஆலயங்களில் சமஸ்கிருதத்தில் மட்டுமே இதுபோன்ற திருக்குடமுழுக்குகள் நடைபெறுவது வழக்கம். அந்த மரபை உடைத்தெறிந்து தமிழ் மொழியிலும் இறைவனை வழிபடலாம் என்பதை சம்புநாத ஈஸ்வரத்தில் சிவதொண்டர் அமைப்பினர் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

பிரமாண்டமான இந்தச் சிலையை பெருமளவான மக்கள் தினமும் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 பெப்ரவரி 05 ஆம் திகதி வெளியிடப்பட்டது.